செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

சிலம்பு-௪௯] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௬, ஆடி (Aug'75) [பரல்-௧௨

'செந்தமிழ்ச் செல்வி'

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

'செல்வி' உறுப்பினர்கட்கு வேண்டுகோள்

செந்தமிழ்ச் செல்வியின் 49ஆம் சிலம்பு இவ்விதழுடன் முடிந்து ஆவணித் திங்கள் 12-9-1975இல் 50ஆம் சிலம்பின் முதல் இதழ் வெளிவர விருக்கிறது. இதகாறும் உறுப்பினராய் இருந்து செல்விக்கு ஆதரவு நல்கிய அன்பர்கள் தொடர்ந்து கையொப்பத் தொகையினை அனுப்பி உறுப்பினராக விருக்கும்படி வேண்டுகிறோம். செல்வியின் ஆண்டுக் கையொப்பம் ரு. 10-00 எனவே இத் தொகையினை அன்பர்கள் முன்னதாகவே அனுப்பி வைப்பார்கள் என்ற நம்பிக்கையுடையோம்.

முன்பணமாக அனுப்பாதவர்கட்கு அடுத்து வரும் 50ஆம் சிலம்பின் முதல் இதழ் விலைபெறு அஞ்சலில் (V.P.P) அனுப்பி வைக்கப்பெறும். அதனைப் பெற விரும்பாதவர் முன்கூட்டியே அறிவித்திடில் வீணே அஞ்சற் செலவு ஏற்படாது.

மேலும் செல்வியின் ஆக்கங்கருதிப் புதிய உறுப்பினர்களைச் சேர்த்து அனுப்புமாறும், சேருமாறு நண்பர்களைத் தூண்டும் படியும் கேட்டுக்கொள்கிறோம்.

இதற்கு வாழ்நாட் கையொப்பம் ரு. 120/-

செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு ௪௯	திருவள்ளுவர் ஆண்டு ௨௦௦௬, ஆடி ஆகஃச்டு 1975	பரல் ௧௨

டாக்டர் சாமிநாத ஐயரும் மறைத்திரு மறைமலை அடிகளும்

இவ்விரு பெரும் புலவர்களும் தமிழகத்திலே இருவேறு துறைகளில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி வாழ்ந்த வர்கள். டாக்டர் ஐயர் அவர்கள் தம் தந்தையார் விரும்பியபடி இசைத்துறையில் செல்லாமல் தமிழ் கற்கவே விரும்பி மயிலாடு துறை என்ற மாயூரத்தில் தமிழ் மாணவர்கட்குப் பாடம் சொல்லிக்கொண்டிருந்த மாபெரும் புலவர் தி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் 1870 முதல் 1876 வரை தமிழ் பயின்று அவர்கள் அன்பிற்குகந்த நன்மாணுக்கரானார். தம் ஆசிரிய ரோடு திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் செல்வதுண்டு. அப்போது அருட்டிரு சுப்பிரமணிய தேசிகர் திருவுள்ளங் கவர்ந்து அவர்களிடம் பாடங் கேட்கும் வாய்ப்பினைப் பெற்றார். பின்னர் அங்குள்ள தம்பிரான்களுக்குத் தாம் பாடம் சொல்லி யும் வந்தார்.

இங்ஙனம் இருக்கையில் தம் ஆசிரியர் பிள்ளையவர்களிடம் கல்வி பயின்ற திரு. சி. தியாகராச செட்டியாரவர்கள் கும்ப கோணம் கல்லூரியிலிருந்து 1880ல் தாம் ஓய்வு பெறும்போது தமது இடத்தில் டாக்டர் சாமிநாத ஐயர் அவர்களைத் தமிழ்ப் பண்டிதராக அமர்த்த முயன்று வெற்றி பெற்றார்.

அப்போது அங்கே மாவட்ட இளநடுவ (முன்சீப்)ராக இருந்த சேலம் இராமசாமி முதலியார், டாக்டர் ஐயர் அவர் களிடம் சீவகசிந்தாமணி நச்சினார்க்கினியர் உரை கையெழுத்துப் படியைக் கொடுத்துப் பாடம் கேட்டதோடு அதனை அச்சிடுமாறு வேண்டினர். ஐயர் அவர்களும் அதற்கிசைந்து வேறு ஏடுகள்

பெற முயன்றதில் அருட்டிரு சுப்பிரமணிய தேசிகர் தமது திருமடத்திலுள்ள சுவடி ஒன்றைக் கொடுத்ததோடு வேறு இடங்களிலிருந்தும் சில சுவடிகளை வரவழைத்துக் கொடுத்தனர்.

சீவகசிந்தாமணி, நச்சினார்க்கினியர் உரை 1887 இல் நூல் வடிவில் வெளிவந்தது. அதன் பொருட்டு ஐயர் அவர்கள் ஏடு தேடும்போது பத்துப்பாட்டு, புறநானூறு, மணிமேகலை, சிலப்பதிகாரம், ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் முதலிய சங்க நூல்களுக்குச் சில சுவடிகள் கிடைக்கப்பெற்றன. பின்னர் அவற்றையும் ஒன்றன்பின் ஒன்றாக அச்சிட்டு வெளியிடுவாராயினர். அவர்கள் நூல் அச்சிடும் முறை டாக்டர் ஜி. யூ. போப் போன்ற மேனாட்டறிஞர்கள், தமிழகத்தில் இருந்த குறுநில மன்னர்கள், செல்வர்கள், அறிஞர்கள், பல துறைகளில் பணியாற்றிய உயர் அலுவலர்கள், சைவத் திருமடங்களின் தலைவர்கள் முதலியோர் உள்ளங்களைக் கவரவே ஐயர் அவர்கள் எல்லாருடைய அன்பினையும் ஆதரவினையும் பெற்றனர்.

டாக்டர் ஐயரவர்கள் பதிப்பித்த நூல் ஒவ்வொன்றிலும் முகவுரையும், அந்த நூல் நுதலிய பொருள்களும், நூலாசிரியர் உரையாசிரியர்களின் வரலாறுகளும், நூலைத் தந்துதவியவர்கட்கு நன்றியுரையும் முகப்பில் இருக்கும். நூலின் மூலத்தைத் திருத்திச் சீர் பிரித்துப் பதிப்பிடுவர். ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் குறிப்புக்களும், ஒப்புமைப் பகுதிகளும், மேற்கோளாக எடுத்தாளப்பெற்ற பகுதிகளும், பாடவேறுபாடுகளும் காணப்பெறும். இறுதியில் அருஞ்சொற் பொருள் அகர வரிசை இருக்கும்.

ஒரு நூலை அச்சிடும்போதே அடுத்த நூலை வெளியிடுவதற்கு வேண்டிய குறிப்புக்களைத் தொகுப்பர். முன் அச்சிடப் பெற்ற நூலுக்கு மேலும் கிடைக்கப்பெறும் சுவடிகளைத் தேடிப் பெறுவர். அவற்றைக்கொண்டு மறுபதிப்புக்கு அதனைச் செப்பம் செய்வர். இந்த முறையில் அவர்கள் தம் வாழ்நாள் இறுதிக்காலம்வரை பாடுபட்டு வந்தனர். அவற்றைப் பற்றிய குறிப்புகளைச் செல்வி சிலம்பு 47 பரல் 3ல் காண்க.

இந்த முறையில் பத்துப்பாட்டும், எட்டுத்தொகையில் புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், குறுந்தொகை ஆகிய 5 நூல்களும், காப்பியங்களில் சீவகசிந்தாமணி. சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, உதயணகுமார காவியம் ஆகிய 5 நூல்களும், புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல் மயிலைநாதர் உரை, நன்னூல் சங்கரநமச்சிவாயர்

உரை, தமிழ்நெறிவிளக்கம் ஆகிய இலக்கண நூல்கள் நான்கும், புராணங்களில் 14-ம், கோவைகளில் 5-ம், உலாக்களில் 9-ம், குறவஞ்சி ஒன்றும், தூதுகளில் ஆறும், கலம்பகம் ஒன்றும், பிரபந்தத்திரட்டுகள் 3-ம், மும்மணிக்கோவை இரண்டும், பரணிகளில் இரண்டும், இரட்டைமணிமாலை இரண்டும், அந்தாதி மூன்றும், மாலை இரண்டும், வெண்பா மூன்றும், விருத்தம் இரண்டும், பிறவகையில் இரண்டும், உரைநடை நூல்கள் பதினெட்டும் ஆக எண்பத்தொன்பது நூல்களைத் தாமே அச்சிட்டு வெளியிட்டனர். குறுந்தொகைக்கு மட்டும் 1937 இல் தமது தளர்ந்த அகவையில் தாமே விளக்கவுரை எழுதியுள்ளனர் என்பது போற்றுதற்குரியது.

அவர்களுக்காகக் கலித்தொகைப் பதிப்பாசிரியர் இ. வை. அனந்தராம ஐயர், வை. மு. சடகோபராமாநுசாச்சாரியார், தொல்காப்பியம் முதலிய நூல்களைப் பதிப்பித்த சி. வை. தாமோதரனார், தி. த. கனகசுந்தரம் பிள்ளை முதலியோர் ஏட்டுச் சுவடிகளைத் தொகுத்துக் கொடுத்தனர்.

புலவர் சிலர் தாங்கள் எழுதிப் பதித்த நூல்களுக்குப் பாராட்டுரை, சாற்றுக்கவி, அணிந்துரை ஆகியவை கேட்டுப் பெற்றனர். சிலர் தாங்கள் வேலையில் அமர்வதற்குத் தகுதி உரை கேட்டுப்பெற்றனர். சிலர் தாம் நடத்தும் இதழ்களுக்குக் கட்டுரைகள் கேட்டுள்ளனர். சிலர் தாம் படிக்கும் நூல்களில் தமக்கு ஏற்பட்டுள்ள ஐயங்களைத் தெரிவித்து விளக்கங்கேட்டுப் பெற்றனர். பேராசிரியர் மேதை பூண்டி அரங்கநாத முதலியாரவர்கள் தாம் இயற்றிய கச்சிக்கலம்பகத்தில் சில பாட்டுக்களில் சிலவரிகளில் தாம் அமைத்துள்ள சொற்கள் சரிதானா அல்லது அவற்றை நீக்கி வேறு என்ன ஏற்புடைத்தான சொற்களை அமைக்கலாம் என்றும் கேட்டுள்ளனர்.

சீவகசிந்தாமணி உரை வெளிவந்ததும் அதனை விலை கொடுத்து வாங்கிய அறிஞர் சிலர், ''அடுத்து என்னென்ன நூல்கள் பதிப்பிக்கப் பெறுகின்றன? அவை வெளிவந்தவுடன் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்கிறோம்'' என எழுதியுள்ளனர்.

டாக்டர் ஐயர் அவர்கள் தாம் செய்துள்ள பதிப்புத்துறைக்கு வேண்டிய பெரும்புலமை, எல்லையில் பொறுமை, திண்ணிய எண்ணம், இடையரு உழைப்பு, அளவற்ற நினைவாற்றல், கண்டும் கேட்டும் உள்ள செய்திகளை நினைவில் அழுந்தப் பதித்துக்கொள்வதோடு குறிப்பேட்டில் எழுதிவைத்தல் ஆகிய யாவும் ஒருங்கே பெற்றவராவர்.

இவர்கள் தம் ஆசிரியர் மாபெரும்புலவர் பிள்ளையவர்கள் வரலாற்றை எழுதி இருபகுதிகளாக அச்சிட்டு வெளியிட்டுள்ளது

எளிதான செயலன்று. தாம் பாடம் கேட்ட காலத்திற்கு முன்னுள்ள பிள்ளையவர்கள் வரலாற்றை அவர்கள் குடும்பத்தாரிடமும் நண்பர்களிடமும் கேட்டு முதற்பகுதியாக 376 பக்க அளவில் அச்சிட்டுவெளியிட்டுள்ளார். தாம்பாடம்கேட்ட காலமுதல் உள்ள வரலாற்றை இரண்டாம் பகுதியாக 248 பக்க அளவில் எழுதி வெளியிட்டிருப்பதைக் கொண்டு திரு. ஐயர் அவர்கள் தம் ஆசிரியரிடம் எத்துணை அன்பும், மதிப்பும் வைத்திருந்தனர் என்பது நன்கு உய்த்துணரக் கிடக்கின்றதன்றோ! அடுத்துத் தம் வரலாற்றை எழுதவேண்டுமென்று நண்பர்கள் வற்புறுத்தலின்பேரில் 1940 சனவரி முதல் 1942 மே வரை ஆனந்த விகடனில் திங்கடோறும் எழுதி வந்தனர். அதன்கண் தமது 44ஆம் அகவை வரை உள்ள வரலாறே வெளிவந்தது. எஞ்சிய பகுதியை எழுதுமுன்பு 2 ஆவது உலகப் பெரும்போரின் போது டாக்டர் ஐயர் அவர்கள் தமது குடும்பத்தோடு திருக்கழுக்குன்றத்திற்குச் சென்றிருந்தார். அங்கே 28-4-1942 இல் இறைவன் திருவடிநீழலடைந்தார். அப் பிற்பகுதியும் வெளிவந்திருக்குமாயின் எத்தனையோ அரிய குறிப்புக்கள் கிடைத்திருக்கும். எழுதப்பெறுமை தமிழ் மக்களுக்குப் பேரிழப்பேயாகும்.

டாக்டர் ஐயர் அவர்களின் தந்தையார்க்கு இசை பயிற்றுவித்த இசைப்பேரறிஞர்களாகிய கனம் கிருஷ்ணையர், கோபாலகிருஷ்ண பாரதியார், மகாவைத்தியநாதஐயர் ஆகியோர் வரலாறுகளைத் தமக்குரிய கடமையெனக் கருதித் தனித்தனி நூலாக அச்சிட்டு வெளியிட்டனர்.

மேலும் புதியதும் பழையதும், நான் கண்டதும் கேட்டதும், நினைவு மஞ்சரி 2 பகுதிகள், நல்லுரைக் கோவை 4 பகுதிகள் ஆகியவற்றை நினைவிலிருந்தவற்றையும் குறிப்பேட்டில் எழுதி வைத்திருந்த குறிப்புக்களையுங்கொண்டு எழுதி அச்சிட்டு வெளியிட்டனர். இத்தகைய உரைநடை நூல்கள் யாவும் வாழ்க்கையில் கண்டவற்றையும் பிறர்வழிக் கேட்ட குறிப்புக்களையுங் கொண்டு படிப்பவர்க்கு மிகுசுவையூட்டும் வகையில் எழுதியுள்ளனர். நூல்களைப் பதிப்பிப்பதிலும் வாழ்க்கையிற் கண்ட கேட்ட குறிப்புக்களைக்கொண்டு வரலாற்று நூல்களும் உரைநடை நூல்களும் எழுதுவதிலும் ஐயரவர்கள் செய்த தொண்டு புலவர் பெருமக்கட்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.

தமிழேயன்றி வேறுமொழி சிறிதும் தெரியாத ஐயர் அவர்கள் சங்க இலக்கியங்களைப் பதித்துத் தூய தமிழ்நடையில் எழுதும் ஆற்றல் பெற்றிருந்தும் தாம் எழுதிய நூல்களில் வட சொற்களை விரவியுள்ளது ஏனோ? திருவிடை மருதூர்

வரலாற்றை மத்தியார்ச்சுன மான்மியம் (மருது. அர்ச்சுனம்) என்று 1885ல் எழுதி வெளியிட்டுள்ளார். அவர்கள் எழுதிய நூல்களிலோ, கட்டுரைகளிலோ தூய தமிழ் மொழியில் உள்ள திருவூர்ப் பெயர்களும், இறைவன் இறைவியர் பெயர்களும், புகைவண்டி நிலையங்களின் பெயர்களும் இடைக்காலத்தில் பிற மொழியில் மாற்றப் பெற்றமையினை ஏன் கண்டித்தார்கள் இல்லை, 1938ல் இந்திமொழி கட்டாயப்படுத்தப்பட்டபோதும் அதனால் தமிழ் கெடும் என்று எழுதவும், பேசவும் இல்லை. அதற்குக் குலச்சார்பும் சுற்றுச் சார்புமே காரணமாகும் என்று நாம் அமைதியுறுவது அல்லது வேறு என் சொல்வது?

தனித்தமிழ்த் தந்தை மறைத்திரு மறைமலையடிகளார் தமிழ் மக்கட்குச் செய்த தொண்டினை இனி அறிவோம்:

டாக்டர் ஐயர் அவர்கள் தம் ஆசிரியர் மாபெரும் புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் 1870 முதல் 31-1-76 வரை தமிழ் நூல்கள் சிலவற்றை முறையாகப் பாடம் கேட்டதன் பின்னரே 15-7-1876இல் மறைத்திரு மறைமலையடிகளார் நாகையில் பிறந்தனர். அடிகளாரின் பெற்றோர் பிள்ளைப்பேறு குறித்துத் திருக்கழுக்குன்றத்திற்குச் சென்று நோன்பு இருந்து நாகைக்குத் திரும்பிய பின்னரே அடிகள் பிறந்தமையால் தம் அருமைக் குழந்தைக்கு 'வேதாசலம்' என்னும் திருக்கழுக்குன்றத்து இறைவன் திருப்பெயரைச் சூட்டினர். இங்கே டாக்டர் ஐயர் அவர்கள் மறைந்த ஊர் மறைத்திரு மறைமலையடிகளார் பிறப்பதற்கு வாயிலாக இருந்த திருவூராகும் என்பது நினைவுகூர்தற்குரியது.

அடிகளார் நாகையில் உள்ள வெசுலி மிசன் கல்லூரியில் கல்வி பயின்றனர். பள்ளிப்படிப்பு முடிந்து கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது தம் தந்தையார் இறையடி சேரவே, படிப்பை நிறுத்தி வேலைதேடுவாராயினர். அப்போது அங்கே புத்தக வணிகம் செய்துகொண்டிருந்த இயற்றமிழ்ப்புலவர் திரு. வே. நாராயணசாமி பிள்ளையவர்களிடம் சில தமிழ் நூல்களைப் பாடம் கேட்டனர். மனோன்மணீயப் பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளையவர்களும் இவர் படிப்பதற்குமுன் சிலகாலம் நாகைக்கு வந்து இயற்றமிழ் நூல்கள் சிலவற்றை அதே ஆசிரியரிடம் பாடம் கேட்டுள்ளனர். வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகர் அவர்கள் நாகை சைவசித்தாந்த சபையில் 'சைவ சித்தாந்தம்' பற்றிச் சொற்பொழிவு ஆற்றியதைக் கேட்ட அடிகளார் அவர்களோடு தொடர்பு கொள்ள அவாவுற்றனர். மாபெரும்

புலவர் தி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை உறவினரும் திரு. சோம சுந்தர நாயகர் அன்புக்கு உரியவரும் ஆன திரு. மதுரை நாயகம் பிள்ளை, திரு. நாராயணசாமி பிள்ளை அவர்களிடம் பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் முதலியவற்றைப் பாடம் கேட்டவராதலால் அடிகள்பால் நட்புக்கொள்ளலாயினர். எனவே, அவர்கள் அடிகளைத் திரு. சோமசுந்தர நாயகர் அவர்களிடம் அழைத்துப்போய் அறிமுகஞ் செய்து வைத்தனர். உயர்திரு நாயகர் அவர்களும் அடிகளின் கூர்த்த அறிவைக் கண்டு அவர்களைச் சென்னைக்கு வரும்படி அறிவுறுத்தினர். இங்ஙனம் இருக்கையில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் அழைத்தபடி அடிகளார் திருவனந்தபுரம் சென்று 5 திங்கள் வரை அங்குள்ள பள்ளி ஒன்றில் ஆசிரியராக வேலைபார்த்து வந்தனர். அவ்வூர் தட்பவெப்ப நிலை பிடிக்காமையால் அடிகள் தமது வேலையினின்றும் விடுதிபெற்று நாகைக்குத் திரும்பி விட்டனர்.

அடிகளார் டாக்டர் சாமிநாத ஐயர் அவர்களுக்கு எழுதிச் சீவகசிந்தாமணி உரையை வரவழைத்தபின் 22-9-1894இல் அந் நூலைப்பற்றிப் பாராட்டிக் கடிதம் ஒன்று எழுதினர். அக்கடிதம் சிலம்பு 46 பரல் 1ல் வெளியிடப் பெற்றுள்ளது. வடசொற் கலப்பினால் தமிழுக்கு ஏற்பட்ட பொல்லாங்கினை உணராதிருந்த காலமாதலால் அக் கடிதத்தில் வடசொற்கள் மிகுதியாகக் கலந்துள்ளன. ஆனால் தமிழ் கற்பதிலும் நூல்கள் வாங்குவதிலும் அளவிறந்த பற்றும், தமிழ்நூல் பதிப்பாளரிடம் தாம் கொண்டிருந்த அன்பும் புகழ்ச்சியும் அடிகளார் எழுதிய அக் கடிதத்தின்வழி நன்கு அறியலாம்.

அந்த ஆண்டில் அடிகளார் தமக்கு முதன் முதலிற் பிறந்த பெண் குழந்தைக்குச் 'சிந்தாமணி' என்று பெயர்சூட்டி அகம் மிக மகிழ்ந்தனர்.

அடுத்து நாகையிலிருந்து 21-7-1897இல் டாக்டர் ஐயர் அவர்கட்கு எழுதிய கடிதம் வருமாறு:

"சென்ற நான்கு திங்களாக நான் சிற்றூர், முன்சிப் மகா. ள. ள. ஸ்ரீ நல்லசாமி பிள்ளை அவர்கள்பால் தமிழ்ப் பண்டிதராக அமர்ந்திருக்கிறேன். குறிஞ்சிப் பாட்டுக்குச் சிறந்த ஒரு பொழிப்புரை விசேடவுரை குறிப்புகளுடன் எழுதினேன். அது ஜனங்களுக்கு விளங்காதென்று அதன் விடயத்தை விரித்துரைக்கச் சொல்லித் தாமே அதை இங்கிலிஷில் மொழிபெயர்த்தெழுதி அம் மாதிரியை ஒட்டித் தமிழில் எழுதும்படி வேண்டினமையால் அவ்வாறே எழுதியிருக்கிறேன். இது ஆங்கிலக் கல்விப் பயிற்சியுடையார்பால் தோன்றும் குற்றங்களில் ஒன்றும். மணிமேகலை முடிந்ததா? சிவகிருபையால் தங்களை ஒருமுறை சந்தித்துப் பேச சமயம் கிடைக்காமல் போயிற்று. இனி என்று கூடுமோ?

சென்னையிலிருந்து 27-8 1897 இல் எழுதிய கடிதம் :

உபயக்ஷேமம், மகா. ா. ா. ஸ்ரீ தண்டலம் பாலசுந்தர முதலியார் அவர்கள் வீட்டில் இருக்கிறேன். கிறித்துவக் கல்லூரி (Christian College) யில் ஒரு தமிழ்ப் பண்டித வேலை ஒழிந்திருத்தலால் உய்தியின்பொருட்டது கிடைக்குமாறு மேற்படி முதலியார் அவர்கள் வாயிலாக முயற்சி செய்ய மேற்படி கல்லூரி உதவி ஆசிரியர் (College Asst) இரங்கையச் செட்டியாரவர்கள் கதுமென என்னை அழைத்து 'முதுநிலை, இளநிலை வகுப்புமாணவர்' (Senior and Junior class) கட்குப் படிப்பிக்கச் சொன்னதில் அன்றைய பாடமாகிய மாதவி கோவலனுக்கு எழுதிய கடித விஷயத்தைச் சிவகிருபையால் மாணவர் கடாக்கட்கு விடையுடன் இனிது விளக்கிப் போந்தேன். மாணவர் என்னையே பெற முயல்கின்றனர். ஸ்ரீ. செட்டியாரவர்கட்கும் அதுவேயாயினும் மற்றையோரையும் பரீட்சிக்க விரும்புகிறார். தாங்களென் தமிழ்க் கல்விப் பயிற்சியைப்பற்றி ஒரு நற்சாட்சிப் பத்திரம் கொடுக்குமாறு வேண்டுகிறேன்.

எனக்கு ஞாபக சக்தி மிக உண்டு. பத்துப்பாட்டில் ஆறு பாட்டுப் பாராமல் சொல்லவரும். திருக்கோவையார், திருக்குறள், தொல் சொல்லதிகாரம் முழுவதும் பாராமல் வரும். பொருளதிகாரம் பாராமல் உருப்போடுகிறேன். நன்னூல் விருத்தி, யாப்பு, இறையனார், தண்டி பாராமல் வரும். சிலப்பதிகாரம் 5 காதை பாராமல் வரும். ஏனையவும் பண்ணுகிறேன். அநேக நமஸ்காரம்.

தொழும்பன்

(ஒம்) வேதாசலம்

குறிப்பு

தமிழில் உரைநடையினைச் செவ்விதாக எழுதும்பொருட்டுப் பண்டித நாவலர் வேங்கடசாமி நாட்டார் அவர்கள் திருக்குறள் பரிமேலழகர் உரையினையும் சிவஞான முனிவர் எழுதிய சிவஞான போதச் சிற்றுரையினையும் உருப்போட்டதாகச் சொன்னதுண்டு.

சென்னையிலிருந்து' 7-9-1898 இல் எழுதிய கடிதம்

மணிமேகலையில் 'சிறைவிடு காதை' வரையில் படித்தறிந்து கொண்டேன். நுண்ணுணர்வாலும் சங்கச்செய்யுள் பயிற்சி மிகுதியாலும் ஆராய்ச்சி வகையாலும் பெரிதும் உழைப்பு எடுத்து எழுதப் பெற்ற 'மணிமேகலை உரை' பொலிவு பெரிதும் நன்குமதிக்கின்றேன்.

சென்னையிலிருந்து 18-2-1901இல் எழுதிய கடிதம் வருமாறு :

பிரார்த்தனையின் பொருட்டுச் செய்யப்பட்ட *'திருவொற்றியூர் முருகர் மும்மணிக்கோவை' தங்களுடைய பார்வைக்கு அனுப்பப் பட்டது. ஒருபிரதி நேற்று முருகன் சந்நிதியில் வெளிப்படுத்தப் பட்டது. (இந்நூல் அடிகள் மாணவர் இளவழகனார் எழுதிய உரையோடு பின்னர் வெளியிடப்பட்டது.)

---

*அடிகளார் தம் கைப்பட அச்சுப்போல இந்நூலை எழுதி வைத்திருப்பது கண்கவர் முறையில் உள்ளது.

தாங்கள் இனி வெளியிடுவதற்குச் சித்தஞ் செய்துகொண்டிருக்கும் நூல் யாது? அதைத் தயவுசெய்து உடன் தெரிவிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

சென்னை 6-2-1902-இல் எழுதிய கடிதம்

தமிழினருமை பெருமை முற்றுமுணர்ந்த ஐயர் அவர்களுக்கு வந்தனம் செய்து எழுதும் விண்ணப்பம்.

அடியேன் திருவருளால் சுகமாயிருக்கின்றேன். தங்கள் தேக ஆரோக்கியத்தை அடிக்கடி தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

தமிழ்ப் புலவர்களெல்லாம் ஒருமித்தொரு தமிழ்க்கழகம் நிலைநிறுத்தித் தமிழ் வளர்த்தற்குச் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பெரும்பாலும் இத்தென்னாட்டின்கண் உள்ள தமிழ்ப் புலவர்கள் எல்லாரும் அதன்கண் சேர்ந்து உழைக்கும் கருத்துடைய வராய் இருக்கின்றார்கள். அக்கழகம் நிலைபெற்றின் வரலாறு பதிப்பிட்ட கடிதங்கள் தங்கட்கு நேற்று அனுப்பியிருக்கின்றேன். தாங்களும் அக் கழகத்தின்கண் அமர்தற் கொருப்படுவீர்கள் என்று வேண்டுகிறேன். முதற் கூட்டம் சென்னை மாநகரில் அடுத்த சனவரி மாதத் தொடக்கத்தில் கூட்டப்பெறும்.

தம் ஆசிரியர் பெருமான் சோமசுந்தர நாயகர் 22-2-1901 ல் இறையடி சேரவே 'சோமசுந்தரக்காஞ்சி' என்ற நூலை வெளியிட்டனர். அதன்பேரில் மறுப்புக்கள் சில வரவே 'சோமசுந்தரக் காஞ்சியாக்கம்' என்ற நூலைப் பதிப்பித்தனர். அடிகளார் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் சைவசித்தாந்த சாத்திர நூல்களையும் திருந்தக் கற்றவர். அவற்றோடு வடமொழியும் ஆங்கிலமும் நன்கு கற்றவர்.

2-12-1895 ல் மனோன்மணியப் பேராசிரியர் அடிகளார்க்கு வழங்கியுள்ள சான்றிதழில்,

"முன்னமே இரண்டாந்தரக் கல்லூரியில் தமிழ் கற்பிக்கப் போதுமான இலக்கண இலக்கியங்களில் சிறந்த தேர்ச்சி பெற்றவராய் இருக்கின்றார். குறைந்த அளவில் எஃப். ஏ. (F. A.) வகுப்புக்குரிய ஆங்கில அறிவு பெற்றாரானால் மேலை நாட்டு முறைப்படி தமிழ் நூல்களை வரலாற்றுச்சான்றுடன் ஆராயவும், எழுதவும் வல்லுநராவ ரென்பது என்னுடைய சிறந்த எண்ணம்."

அவர்கள் கருத்து மெய்யாகவே அடிகளார் பிற்கால வாழ்க்கையில் நிறைவு பெற்றதைப் பேராசிரியர் அவர்கள் கண்டு மகிழ்வதற்கில்லாமல் 26-4-1897 இல் மறைந்துவிட்டனர். எனினும் அவர்களின் பொன்னான கருத்து மெய்யாகவே நிறைவேறியுள்ளதை வழிவழிவரும் தமிழ் அறிஞர் பெருமக்கள் அறிந்து இன்புறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

அடிகளார் தமிழர் நல்வாழ்வுக்காகவே இறைவனால் படைத்து அனுப்பப்பெற்றவர். தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு ஆகியவற்றிற்கு அவ்வப்போது ஏற்பட்ட ஏற்படும் தீங்குகளைப் பேச்சாலும் எழுத்தாலும் எடுத்து விளக்கி அவற்றை ஒழித்துத் தமிழ் மக்கள் உய்திபெறும்பொருட்டே படைக்கப்பட்டவர் என்பதும் உண்மை.

நாகை நீலலோசனியில் அடிகளார் முதற்குறளுக்கு எழுதிய விரிவுரையைக் கண்டு பொருமை கொண்டு மாயாவாதி ஒருவர் 'முதற்குறள் வாதம்' என்ற கட்டுரை ஒன்றை எழுதி வெளியிட்டனர். அதனைப் படித்த அடிகளார் 'முதற்குறள் வாதநிராகரணம்' என்ற மறுப்புநூலை எழுதி வெளியிட்டனர். அதனைப் படித்த நாயகர் அவர்கள் அடிகளாரின் நுண்மாண் நுழைபுலமையினைப் பெரிதும் வியந்து போற்றினர். பிறகு திரு நாயகர் அவர்கள் விரும்பியபடி 'துகளறுபோதம்' என்ற சைவசித்தாந்த நூலுக்கு நல்லுரை ஒன்று எழுதினர்.

கிறித்துவக் கல்லூரியில் மாணவர்கட்கு ஓராண்டு முல்லைப் பாட்டும், பின்னர் ஓராண்டு பட்டினப்பாலையும் பாடமாக வைக்கப்பட்டிருந்தன. அவற்றிற்கு நச்சினார்க்கினியர் பாட்டிலுள்ள அடிகளை முன்னும் பின்னுங் கொண்டுகூட்டி எழுதியுள்ள உரை பொருந்தாது என எடுத்துக்காட்டி மாணவர்கள் நன்கு புரிந்துகொள்ளும்வகையில் விரித்து விளக்கிப் பாடம் சொன்னதைக் கேட்ட மாணவர்கள் அவற்றை அச்சிட்டு நூல்கள் ஆக்கும்பொருட்டுப் பணம்திரட்டிக் கொடுத்தனர்.

தமிழர்நாகரிகமும் ஆரியர்நாகரிகமும் ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்டவை என்பதை விளக்கித் தூய தமிழர் நாகரிகமே உலகத்துக்கு எடுத்துக்காட்டாக இலங்குவது என்று வரலாற்றுச் சான்றுகளுடன் 'பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்' என்ற நூலையும், 'வேளாளர் நாகரிகம்' என்ற நூலையும் அடிகளார் எழுதி வெளியிட்டனர்.

கல்லூரிக்குப் பாடமாக நல்லதொரு நாடக நூல் வேண்டுமென்று கருதி காளிதாசர் எழுதிய வடமொழியிலுள்ள சாகுந்தல நாடகத்தைச் சீரிய முறையில் மொழி பெயர்த்து வெளியிட்டதோடு நடிகர்களும், நாடக ஆசிரியர்களும் வியக்கும் வண்ணம் 'சாகுந்தல நாடக ஆராய்ச்சி' என்ற நூலை எழுதி வெளிப்படுத்தினர். அந்நூலுக்குக் காஞ்சி சங்கராச்சாரியார் சுவாமிகள் பரிசுத்திட்டம் ஒன்று அமைத்திருக்கின்றனர்.

மேலும் அடிகளார் எழுதிய 'அம்பிகாபதி அமராவதி' என்ற நாடக நூல் அவர்கள் மறைவுக்குப்பின் வெளியிடப்

பெற்றது. அந்நாடகத்திற்கு முகவுரையும், ஆராய்ச்சியும் எழுதுவதற்கு முன் அடிகளார் இறையடி சேர்ந்தமை தமிழ் மக்களுக்கு ஒரு பெருங்குறையேயாகும்.

ஆங்கில நூலாசிரியர் அடிசன் (Addison) எழுதிய ஆறு கட்டுரைகளை எடுத்துத் தூய தமிழில் மொழிபெயர்த்துச் 'சிந்தனைக் கட்டுரைகள்' என்ற தலைப்பில் வெளியிட்ட நூலும் தாம் அவ்வப்போது எழுதிய அரிய கட்டுரைகளைத் தொகுத்து வெளியிட்ட 'அறிவுரைக் கொத்து' என்ற நூலும் கல்லூரி வகுப்புகட்குப் பாடமாக வைக்கப்பெற்றதுண்டு.

மேனாட்டு ஆங்கிலப் புதின நூலொன்றைத் தழுவி எழுதப் பெற்ற 'நாகநாட்டரசி குமுதவல்லி' என்ற நூலும் தாமே புனைந்து எழுதிய சீர்திருத்தக் கருத்துக்கள் அடங்கிய 'கோகிலாம்பாள் கடிதங்கள்' என்ற நூலும் மக்கள் உவந்து படிப்பதற்குரிய சிறந்த புதினங்களாகும்.

மக்கள் நோயின்றி வாழ வழிகாட்டும் வகையில் 'மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை' என்ற நூலை யாத்ததோடு 'பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்' என்ற நூலையும் யாத்தனர். நோயின்றி வாழ இந் நூல்களைக் கட்டாயமாக மக்கள் ஒவ்வொருவரும் கற்க வேண்டும்.

இயற்கை மீறிய நுண்ணுணர்வுச் செய்திகள், உயிரியற் செய்திகள், ஆவி உலகச் செய்திகள் ஆகியவை பற்றித் தமது பழக்க உணர்விற் கண்டவற்றைக் கொண்டும், மேனாட்டறிஞர் சிலர் எழுதிய நூல்களைக் கொண்டும் 'மரணத்தின்பின் மனிதர் நிலை,' 'யோகநித்திரை (அறிதுயில்)' 'தொலைவிலுணர்தல்' 'மனிதவசியம் (மனக் கவர்ச்சி)' ஆகிய நான்கு நூல்களை எழுதியுள்ளனர்.

சைவசித்தாந்த சமய உண்மைகளை சைவநன்மக்கள் தெளிவுற அறிதற்பொருட்டுச் 'சைவசித்தாந்த ஞானபோதம்,' 'பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம்,' 'கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவமாகா!' 'சிவஞான போத ஆராய்ச்சி' ஆகிய நான்கு நூல்களை இயற்றி வெளியிட்டனர். இவற்றில் சிவஞானபோத ஆராய்ச்சி மட்டும் முற்றும் எழுதி முடிக்கப் பெறாவிடினும் எழுதிய வரை 292 பக்க அளவில் வெளியிடப் பெற்றுள்ளது. திருக்குறள் ஆராய்ச்சியும், அடிகளார் கருதியபடி முடிக்கப் பெறவில்லை எனினும் எழுதிய வரை 110 பக்க அளவில் வெளியிடப் பெற்றுள்ளது. தமிழர் சமயம் இனைத்தெனத் தெளிவுறத் தமிழ் மக்கள் அறியும் பொருட்டுத் 'தமிழர் மதம்' என்ற அரிய நூலை 283 பக்க

அளவில் அச்சிட்டு வெளிப்படுத்தினர். அடிகளார் 136 பக்க அளவில் சைவசித்தாந்தத்தைப் பற்றி ஆங்கிலத்தில் 'The Saiva Siddhanta as a Philosophy of Practical Know ledge' என்று எழுதிய நூலுக்கு ஆக்சுபோர்டு கார்பசு கிறிஸ்டிஸ் கல்லூரிப் பேராசிரியர் எஃப். சி. எசு. ஃசில்லர் என்பவர் நன்னயம் எழுதியுள்ளனர்.

இன்று நம்மால் பேசப்படும் சீர்திருத்தங்களை விளக்கி அடிகளார் 1923ல் 'சாதி வித்தியாசமும் போலிச் சைவரும்' என்ற நூலையும் 'சீர்திருத்தக் கருத்துக்கள்' என்ற சிறிய நூலையும் எழுதி வெளியிட்டனர்.

'முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர்' என்ற நூலும் வரலாற்றுச் சான்றுகளுடன் எழுதப்பட்டதாகும். அதனை ஆங்கிலத்தில் (Ancient and Modern Tamil Poets) என்ற தலைப்பில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளனர். இதன்கண் முற்காலத் தமிழ்ப் புலவோர் தமிழ் மொழியைத் திரியவொட்டாமலும் அழியவொட்டாமலும் பேணிக் காத்து மேலை நாட்டாரும் விழைந்து போற்றுமாறு நூல்களை எழுதினர் என்றும், ஆனால் பிற்காலப் புலவோர் அயன்மொழி மயக்கத்தினால் வரைதுறையின்றி அயன் மொழிச் சொற்களைப் புகுத்தித் தந் தாய்.மொழியை மாசுபடுத்தி விட்டனர் என்றும் அடிகளார் விளக்கியுள்ளனர்.

அடிகளார் திருவாசகம் முழுமைக்கும் விரிவுரை எழுத விரும்பினார். நான்கு அகவல்களுக்குமட்டும் எழுதியதோடு அப்பணி நின்று விட்டது. அப்பகுதியைக் கொண்ட 'திருவாசக விரிவுரை' என்ற நூல் 1922 இல் வெளியிடப்பட்டது.

1440 பக்கங்கள் கொண்ட 'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்' என்ற விரிவான ஆராய்ச்சி நூல் அடிகளார் எழுதிய நூல்களுக்கு மணிமுடியாகும். அதன்கண் மாணிக்கவாசகர் மூவருக்கும் முற்பட்டவர் என்ற செய்தியினை வரலாற்றுச் சான்றுகளுடன் நிறுவியுள்ளார். அதனை மறுப்பவர் சிலர் இருப்பினும் அவர்கள் மறுப்புரை ஒருபோதும் அடிகளார் கொள்கைக்கு எதிர் நிற்காது.

மேலும் அவர்களுடைய ஞானசாகரம் (அறிவுக்கடல்) என்ற தமிழ் இதழிலேதான் அடிகளார் எழுதிய நூல்களிற் சில பகுதி பகுதியாக வெளியிடப் பெற்றன. Ocean of Wisdom என்ற ஆங்கில இதழையும் சிலகாலம் நடத்தினர். 1904ஆம் ஆண்டு அடிகள் தொடங்கிய சைவசித்தாந்த மகா சமாசம் அவர்கள் முயற்சியால் நான்கு ஆண்டுகள் மிகவும் சீரும் சிறப்புமாக

நடைபெற்றது. அவர்கள் தொடங்கிய சமாசம் இப்போதும் செயல்பட்டு ஆண்டுதோறும் விழாக் கொண்டாடுகின்றது.

1938 இல் இந்திமொழி தமிழ்நாட்டுப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாகப் புகுத்தப்பட்டபோது 'இந்தி பொது மொழியா?' என்ற ஆராய்ச்சி நூலை 40 பக்க அளவில் வெளியிட்டதோடு எதிர்ப்பு மாநாடுகளிலும் தலைமை தாங்கி ஆற்றிய உரைகளால் கட்டாயப் பாடம் கைவிடப்பட்டது.

இவ் வகையானெல்லாம் தமிழ் மக்கள் முன்னேற்றத்திற்கு முயற்சிசெய்த அடிகளார் எங்ஙனம் ஏட்டுச் சுவடிகளைத் தேடி நூல்களைப் பதிப்பிக்கமுடியும்? ஆகவேதான் டாக்டர் ஐயர் அவர்களும் மறைமலையடிகளாரும் தத்தம் புலமையினை வெவ்வேறு துறைகளில் புலப்படுத்தித் தொண்டாற்றினர் என்று கூறுதலே பொருந்தும். அடிகளார் தாம் எழுதிய நூல்கள் பலவற்றிற்கு ஆங்கிலத்தில் முகவுரை எழுதுவது வழக்கம். அப்படி 16 நூல்கட்கு எழுதிய ஆங்கில முகவுரை மட்டும் 145 பக்கங்கள் வரை எனக் கணக்கிடப் பெறுகின்றது.

அடிகளார் தமது ஆராய்ச்சிக்குத் தொகுத்த 3000க்கு மேற்பட்ட ஆங்கில நூல்களோடு, தமிழ் வடமொழி நூல்களையுஞ் சேர்த்து ஆக மொத்தம் 4000 நூல்களைப் பொதுமக்கட்குப் பயன்படுத்தும்பொருட்டுத் தாம் 15—9—50இல் இறையடி சேர்வதற்கு முன் எழுதிய தமது விருப்ப ஆவணத்தில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திடம் ஒப்புவிக்குமாறும், தாம் எழுதிய நூல்களை அச்சிடும் உரிமையினையும் கழகத்திடமே ஒப்புவித்து அவற்றின் விற்பனை ஊதியத்தினை இன்னின்னார்க்குக் கொடுக்குமாறும் அதில் ஒரு பகுதியினை மட்டும் பொதுநிலைக் கழக விழா நடத்துவதற்கு ஒதுக்குதல் வேண்டுமாறும் குறிப்பிட்டுள்ளனர்.

மறைமலையடிகள் நூல்நிலையம் 1958 முதல் சென்னை 105, லிங்கிச்செட்டித்தெரு சோமு செட்டியார் வீட்டிலே நடைபெறுகின்றது. வள்ளல் இராமலிங்க அடிகளார் முதன்முதல் அந்த வீட்டிலேயேதான் பேசினர் என்பது வரலாறு. பல்லாவரத்தில் அடிகளார் வாழ்ந்த இல்லம் கலைமன்றமாகத் திகழ்கின்றது.

டாக்டர் ஐயர் அவர்கள் தொகுத்துவைத்திருந்த நூல்களும் சுவடிகளும் அவர்களுக்கு வரப்பெற்ற கடிதங்களும் திருவான்மியூரில் நடைபெறும் டாக்டர் சாமிநாதஐயர் நூல்நிலையத்திலே இடம்பெற்று ஆராய்ச்சியாளர்கட்குப் பயன்படுகின்றன.

இவ்விருபெரும்புலவர்கள் தொகுத்த நூல்கள் மக்கட்குப் பயன்படவும், எழுதிய நூல்கள் மீண்டும் மீண்டும் அச்சிடப் பெறவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது திருவருட்செயலே ஆகும்.

டாக்டர் ஐயர் அவர்கள் சிலை சென்னை மாநிலக் கல்லூரி முகப்பிலும், அடிகளார் சிலை நாகையிலும் நிலைத்த புகழோங்க அமைக்கப்பெற்றிருப்பது மக்கள் மகிழ்வதற்கு உரியது.

டாக்டர் ஐயரவர்கள் தமக்கு வரப் பெற்ற கடிதங்களைப் பாதுகாத்து வைத்துள்ளனர். ஆனால் அவர்கள் பிறர்க்கு எழுதிய கடிதங்களைத் தொகுப்பதற்கு யாரும் முயலவில்லை. தட்டச்சுப் பொறியில் படியெடுத்து வைப்பதற்கும் அக் காலத்தில் வாய்ப்பில்லை. எதிர்மாறாக அடிகளார் தமக்கு வரப்பெற்ற கடிதங்களைப் பாதுகாத்து வைக்கவில்லை. ஆங்கிலத்திலும் தமிழிலும் அடிகளார் எழுத்து முத்துப்போல் அழகாய் இருக்கு மாதலால் அடிகளார் எழுதும் கடிதங்களைப் பெற்றவர்கள் பெரும்பாலோர் பாதுகாத்து வைத்திருந்தனர். அவற்றில் பெரும்பாலானவற்றை யான் கேட்டு வாங்கித் தொகுத்து வைத் திருக்கின்றேன்.

அடிகளார் தம் நூல்கட்கெல்லாம் மேலுறையிட்டு அழகுறப் பேழையில் அடுக்கிவைப்பர். படித்த நூல்களி லெல்லாம் வரிக் கோடுகளும் ஓரக் குறிப்புக்களும் இருக்கும். அடிகளார் தமது வாழ்க்கையைக் கலையாகவே அமைத் திருந்தனர். மேனி அழகு, குரல் அழகு, இருப்பதில் நடப்பதில் படிப்பதில் உண்பதில் அழகு, நின்று சொற்பொழிவு ஆற்று வதில் அழகு, எல்லாம் அழகு.

அவர்கள் தமது சொற்பொழிவை இரண்டு மணி நேரத் திற்கு அமைத்துக் கொள்வர். அது நூலமைப்புப் போன்ற தாகவே இருக்கும். சொற்பொழிவின் இறுதியில் தாம் பேசிய கருத்துக்களை நிரல்படத் தொகுத்து (Synopsis) உரைப்பதைக் கேட்பதற்கு இனிமையாயிருக்கும். இடையிடையே மேற்கோள் பாடல்களை இசையுடன் பாடுவர்.

அடிகளார் தாம் எழுதிய நூல்களிற் பெரும்பாலான வற்றைத் தமது சொந்தத் திருமுருகன் அச்சகத்திலே பதிப் பித்தனர்.

இவ்விரு பெரும் புலவர்களைத் தமிழகம் பெற்றது பெறுதற் கரிய பெரும்பேறாகும்.

கலைமகள் ஆசிரியர் திரு. கி வா. சகந்நாதன் அவர்கள் தம் ஆசிரியர் பெருந்தகை டாக்டர் சாமிநாதையரவர்கள் இயல்பிற்கொத்த நன்மாணாக்கராகவும், திருக்குறள் பீடம் திரு. இளவழகனார் என்னும் அழகரடிகள் தம் ஆசிரியர் பெருந்தகை சுவாமி வேதாசலம் என்னும் தனித்தமிழ்த்தந்தை மறைமலை யடிகளார் இயல்பிற்கொத்த நன்மாணாக்கராகவும் விளங்கு கின்றனர் என்பது அறிந்து மகிழ்தற்குரியது.

———

வ சு.

திருமுறைத் திறம்

[திருக்குறள் பீடம், குருகுலம், அழகரடிகள்]

முன்முறை

'உலகப் பொதுமறை' என்னும் ஒரே திருமறை நூல் உலக மக்களுக் குரியது, அதுவும் உலகப் பொது மக்களுக்கு; அவர்கள், சிறப்பு மக்களாகும்பொருட்டு அறம் உரைப்பது!

உலகப் பொதுமக்கள் என்போர், ஆடவரும், மகளிரு மாய் இணைந்து இல்வாழ்க்கையில் இருப்போர், அவர்களுக்கு இத் திருமறை வழி காட்டுகிறது; 'அறம், பொருள், இன்பம்' என்ற வெளிப்படை வாழ்க்கை நெறிகள் மூன்றும் அவற்றின் பயிற்சியிலிருந்து அடையக்கூடிய வீடு என்னும் மெயப்பொருள் துறை ஒன்றும் ஆக நான்கு அதன் நெறியும் துறையும்.

வாழும் மக்களுக்குரியது இத் திருமுறை; அதனால் இத் திருக்குறள் 'வாழ்க்கை மறை' என்றே சிறப்பிக்கப்படும்.

திருமறையை அருளிச் செய்த திருவள்ளுவர் புலமையும் தெய்வத் தன்மையும் வாய்ந்த தெய்வப் புலவர்; சிறந்த இல் வாழ்க்கையர்; இருவகைப் பற்றும் அற்ற மெய்ஞ்ஞானியர் அவர் அருளிச்செய்த தெய்வ மறையை அனைவரும் முதல் நூலாகப் பின்பற்றி உய்வு கூடினர்.

நூல்கள் சிலவற்றைத் தொகுத்து அவற்றைச் சிறந்த நூல்கள் என்று பின்வருவோர் பாராட்டுவதுண்டு. ஏழில் ஒன்ருகவும், ஆறில் ஒன்ருகவும், ஐந்தில், நான்கில், மூன்றில், இரண்டில் ஒன்ருகவும் திருக்குறள் சிறப்பிக்கப்படும். அது திருமறை நூலாதலின், அந்நிலையில் முதன்மையும் தலைமையும் பெறும்.

தேவர் குறளும் திருநான் மறைமுடியும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என்று உணர்.

என்னும் செய்யுளை இங்கு நினைவு கூரலாம்.

இலக்கண இலக்கிய வளர்ச்சிகளெல்லாம் இவர் திருமறையிலிருந்து வளர்ந்தன; சமய மெய்யுணர்வுகளும் கலை ஞானங்களும் பெருகின.

அத்தகைய திருமறைக் குரவர், 'வாழ்க்கை' என்று எடுத்துக்கொண்டது இல்வாழ்க்கையை; அறன் எனப் பட்டதே

இல்வாழ்க்கை' என்பது அவர் திருமொழி. இல்வாழ்க்கையை, 'வாழ்க்கை' என்றே அவர் சிறப்பித்துள்ளார்.

> "பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் இல்வாழ்க்கை"

எனவும்,

> "மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை"

எனவும் திருமறையில் வரும்.

'இல்வாழ்வான்' என்பது அவர் பொன்னுரை. இல்வாழ்வானே 'வாழ்வாங்கு வாழ்பவன்' என்பது அவர் கருத்து. அவனுக்குரிய துணையை 'வாழ்க்கைத் துணை' என்றும் விதந்தோதுவார்; 'வளத்தக்காள் வாழ்க்கைத் துணை' கணவனை 'இல்வாழ்வான்' என்றவர் மனைவியை 'இல்லாள்' என்றே ஓதினர்.

மக்கள் புகழ்பட வாழவேண்டுமென்பது அவர் நோக்கம்,

> "வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
> வாழ்வாரே வாழா தவர்."

என்று வாழ்வுக்கோர் இலக்கணமும் அவர் வரையறுத்தார்.

இங்ஙனமெல்லாம் 'வாழ்க்கை' என்பது இல்வாழ்வே என்று திட்டமாய்த் தெரிவித்த திருவள்ளுவர் 'துறவு' என்பதை ஒரு வாழ்வாகவே எடுத்துக்கொள்ளவில்லை; அவர் திருமறையில் 'துறவு' என்பது எங்கும் வாழ்க்கையெனக் கூறப்படவில்லை; யான், எனது என்னும் இருவகைப்பற்றும் அறுதலையே 'துறவு' என்று அவர் கொண்டார். அவர் அவ்வாறு கூறியது இல் வாழ்வாரை நோக்கியே; வேண்டின் 'உண்டாகத் துறக்க' எனவும், 'ஐந்தன் புலத்தை விடல் வேண்டும்' எனவும் வேறு யாரை நோக்கி அவர் கூற முடியும்? இல்வாழ்வாரை நோக்கியே கூறமுடியும்.

நிலையாமை, துறவு, மெய்யுணர்வு, அவா அறுத்தல் என்னும் ஞானப்பகுதியின் அதிகாரங்கள் நான்கும் அதற்கு முன் வந்த புலால் மறுத்தல் முதலிய பகுதிகளும் இல்வாழ் வார்க்குக் கூறிய அருளுரைகள் என்றே தேறப்படும். நிலையாமை அதிகாரத்தில் 'ஒரு பொழுதும் வாழ்வது அறியார்' என வாழ்வை நினைந்தமையும் நினைவுகூரலாம். அங்ஙனமே பொருட்பால், இன்பப்பால் அதிகாரங்களும், உலகில் வாழும் ஆண் பெண் மக்களுக்கு நெறியுரைப்பனவேயன்றி வேறில்லை.

ஆதலால் திருக்குறள் என்னும் திருமறை என்பது உலக மக்களாகிய இல்வாழ்வாரை நோக்கி அறம் உரைத்து அவர் வாழ்க்கையை நெறிப்படுத்திச், சிறப்பாக உய்விக்க எழுந்த ஒரே முழு முதல் நூல் என்பதில் ஐயமில்லை.

பொருளுரை

தமிழில் நேர்க் கருத்து அகப்பொருள்; இன்பம் என்னும் அதனை மாட்சிமை செய்ய உதவுவது 'செல்வம்' என்னும் புறப் பொருள்; இரண்டிலும் ஒழுங்கு கூட்டுவது அறம்; முடிவின் பயன் வீடு; தமிழுக்கமைந்த இச் சிறப்புக்கள் நான்கும் 'நான் மறைப்பொருள் எனப்பட்டன. 'தமிழ் நான்மறை' தமிழ் மொழியில் இயன்றவை. அது திருக்குறளாக எழுந்து உலக மக்களை நோக்கி உலகப் பொதுமறையாய் ஓங்கியது.

உண்மைகள் உலக மக்கள் அனைவர்க்கும் பொது; திருக் குறள் என்னும் தமிழ் மறையும், உலகப் பொதுமறையாயிற்று. தமிழில் எழுந்த திருக்குறள் தமிழாகவே திகழ்வதில் வியப் பெதுவுமில்லை.

அறத்துப்பால், பொருட்பால், இன்பப்பால் என்னும் முப்பாலிலும் வரும் 'சில சொற்களும் மரபும் வழக்கங்களும் இங்கே எண்ணிப் பார்க்கலாம்.

தெய்வம் :

இச் சொல் இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்தில் மூன்றாவது குறளில் 'தென்புலத்தார் தெய்வம்' எனவும், பத்தாவது குறளில் 'தெய்வத்துள் வைக்கப்படும்' எனவும், பிற அதிகாரங்களிலும் வருகின்றது: தீ என்னும் பகுதியின் அடி யாகப் பிறந்து 'ஒளி' என்னும் கருத்தும், 'இனிமை' என்னும் கருத்தும் குறிப்பது; அம்மையப்பர் என்னும் ஆண்டவன் இயல்புகள் இவை. 'தே' எனவும், 'தேவர்' எனவும், 'தெய்வம்' எனவும், வரும்

மங்கலம் :

மங்கல் அல்லாதது மங்கலம். இக் கருத்துடைய இச்சொல், நிலையான இயல்பையும் மங்காத வேளைகளில் தோன்றும், இயற்கை அழகையும் உணர்த்தும்.

முகம் :

முகனமர்ந்து (84); முன் அமைந்தது முகம்; முன் அமைந்து முதன்மையுங் கொண்டது. பல அதிகாரங்களில் இச்சொல் வந்தது.

அமரர் :

அடக்கம் அமரருள் உய்க்கும் (121) என வந்தது. அமரர் என்போர் அமெரிக்கையாய் அடங்கி இருப்போர்; அமர்தல் இருத்தல்; புலனவிந்திருக்கும் தவநிலையினர்; அத்தகைய தேவரையும் இச் சொல் குறித்தது.

சோகாப்பர் :

வினைமுற்று (127); 'சோ' பகுதி; சோர்வு முதலிய சொற்களை நினைவுகூர்க. 'சோகம்' என்பது துன்பம் என்னும் பொருளில் வந்த தமிழ்ச் சொல்.

நாமம் :

'நாம நீர் வைப்பின்' (149) என்பதில் நீர் எனப் பெயரள வாகக் கடல்நீர் இருப்பினும்; ஆழமுடைமையால் அதற் குரியதாயிற்று; இது, அச்சம் என்னும் பொருளில் வந்த தமிழ்ச் சொல். நாம் இதன் பகுதி. பெயர் என்னும் கருத்திலும் இது வரும் (360); 'நாம்' என்னும் தன்மைப் பன்மையாய்த் தம்மை உணர்த்தும் நிலையில், பெயரைக் குறித்தது.

அவி :

இது வெண்ணெயைக் காய்ச்சி உருக்கி எடுத்த நெய்யை உணர்த்தும். 'அவி சொரிந்து' (259) என்பதில் இச் சொல் வந்தது; தீயில் கொதித்து அவித்த உணவையும் இது குறிக்கும்; அவிக்கப்பட்டது அவி.

பூதங்கள் :

நுட்பமான மூலப் பொருளிலிருந்து, பூத்து வந்த மண், நீர், தீ, காற்று, வான் என்னும் ஐம்பூதங்கள், இங்கே 'பூதங்கள் ஐந்தும்' (271) என்று குறிக்கப்பட்டன. 'கூடா ஒழுக்கம்' என்னும் அதிகாரத்தில் இச் சொல் வந்தது.

கவிகை :

குடையை உணர்த்திற்று; கவிந்திருப்பதனால் (389).

காலம் :

'கால்' இதன் பகுதி, காலுதல், ஒளிவிட்டுத் தோன்றுதல்; பருவம் என்பது அங்ஙனம் ஒளிவிட்டு வெளிப்படையாய்த் தெரிவது; 'காலம் அறிந்து செயின்' (483) என வரும்.

தண்டம் :

தண்டனை (567) கீரைத் தண்டு, வாழைத் தண்டு முதலியன நினைவு கூர்வார்க்குத் 'தண்டு' என்பது இன்ன

தென்று தெரியும். மூங்கில், பிரம்பு போன்றவற்றின் தண்டு களைக் கையில் வைத்துக்கொண்டு ஆட்சியைச் சேர்ந்தோர் ஆளுதலின், ஆட்சியினால் வழங்கப்படும் ஒறுப்பும் 'தண்டம்' 'தண்டனை' எனப்பட்டது. 'செங்கோல்' என்பதும் 'கோல்' என்னும் பெயரில் வந்தமை இங்கு நினைவு கூர்தற்குரியது.

கருமம்:

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு என்பதில் (578) இச் சொல் வந்தது. கருமம் - காரியம். 'கரு' என்னும் மூலப் பொருள் கொண்டு காரியம் செய்வோர் கருமார்; தொழில் களையும் தொழிலாளர்களையும் கமம், கம்மம், கம்மவார் என்று சிறிது திரிந்து இச்சொல் உணர்த்துவதும் உண்டு.

நாகரிகம்:

'நாகரிகம் வேண்டுபவர்' (580) என்பதிற் காண்க. நகரத்தார் இயல்பு நாகரிகம். நகு - பகுதி. விளங்குதல் என் பது பொருள்; வாழ்க்கை விளக்கம் அமைந்த நகரத்தார் அவ் விளக்கம் குறைந்த நகரம், விளக்கம் அமைந்தது. நாட்டுப் புறத்தாரிடம் கண்ணோடுதற்குரியராதலின் நாகரிகம் என்பது கண்ணோட்டத்தை உணர்த்தியது. 'கண்ணோட்டம்' நாகரிகம் அதாவது நகரத்தாரின் அழகு என்னும் தமிழ்க் கருத்துப் போற்றுதற்குரியது. இதனால் தமிழர் அகநலம் தெரிகின்றது. புறநலன்களை நாகரிகமென அவர்கள் கொள்ளவில்லை என்பதும் இதிலிருந்து துணியப்படும்.

அடியளந்தான் தாஅயதெல்லாம்:

அடியளந்தான்—அடியால் அளவிட்டான்; நாடுகளை அளவிட்டுக் கடத்தல்; இவ்வளவு நிலப்பரப்பு என்று திட்ட மிட்டுக்கொண்டு செல்லுதல்; வேறு வேறு நாடுகளின் மேல் இவ்வாறு ஆளவெடுத்தும் படையெடுத்தலால், "தாஅயதெல் லாம் (610) எனப்பட்டது. அளந்தான், அளந்தானாய் முற்றெச்சம்.

திருக்குறள் ஆசிரியர் உலகப் பொதுநோக்கில் நூல் அருளுதலின் நான்முகன், திருமால், இந்திரன் முதலிய குறிப் பிட்ட ஒரு சமயத்தின் தெய்வப் பெயர்களை, வழக்குகளை, கதை களை எடுத்தாள்வதில்லை. அது அவர் நோக்கத்துக்கு மாறு; ஆட்சியாளர் புலவர் முதலியோர் வரலாறுகள் பெயர்கள் முதலியவற்றைக்கூட அவர் அதனால் எடுத்துக் காட்டுவதில்லை; தம்மைப் பற்றியும் ஒன்றும் கூறுவதில்லை; எல்லா மக்களும் கடைப்பிடிக்கக்கூடிய கருத்துக்களைக் கூறி விடவேண்டும் என்பதே அவர் பொதுமறைக் கொள்கை.

தாமரையினுள் :

தாமரையை ஏந்திய இறைவி; அடியார்க்கு இறைவனும் இறைவியும் பெரும் பித்தராய்; ஏவலும் செய்து உய்விப்பவர்கள்; மடியிலான் தாள்உளாள் தாமரையினுள். (617) என்று திருமறையே கூறியது.

இலக்கம் :

இலக்கு உடையது என்பது இதன் கருத்து (627); இலக் கணம், இலக்கியம் என்னும் தமிழ்ச் சொற்கள் குறிக்கோள் என்னும் இலக்குடையனவே.

அதிநுட்பம் :

அதி—அதிகம்; 'அது' என்று வியந்து குறிப்பிடத்தக்கபடி மிகுந்து விளங்குவது (636).

மந்திரி :

நினைவு வல்லமையாளர் (639); மன் பகுதி; அது 'மந்' எனத் தந்நகரமாகத் திரிந்து வந்தது; மந்திரம் என்பதை நோக்குக; முன் முந்து என்பனவுங் கருதுக மன்னுதல்—மனத்தாற் பகுத்தறிதல்; மன்பதை 'மனிதர்' 'மனம்' முதலியன இங்கே சிந்தித்தற்குரியன.

தொல்காப்பியம் பின்நூலாதலின் திருக்குறளில் வராத பல அயல் வழக்குகள் தொல்காப்பியத்தில் வந்துள்ளன; 'எண்வகைத் திருமணம்' 'கரணம்' முதலியன நினைவு கூர்க.

உறைபதி :

இத் தொடரில் (1015) 'பதி' என வந்தது. தலைவர் என் னும் பொருட்டு, மற்றவர் உள்ளத்திற் 'பதிவாய் இருப்பவர்' என்னும் தமிழ்ச் சொல்.

குலம் :

சுற்றி விளங்கும் சூழலை இச்சொல் உணர்த்தும் (1019); குலம்—குவிந்த சூழல்.

உலகியற்றியான் :

உலகைப் படைத்த கடவுள்; முழுமுதற் கடவுள் (1062); உலகத்தார் ஒப்புக் கொள்ளும் கடவுளை ஈதுணர்த்தலின் பொது மறையில் இடங்கொண்டது.

தாமரைக்கண்ணன் :

தாமரை மலர்போன்ற பெரிய அழகிய கண்களையுடைய இறைவன்; இறைவனுலகம் 'தாமரைக் கண்ணான் உலகு' (1103) எனப்பட்டது. மென்றோள் துயிலின் இனிதோ அவ் வுலகம் என்றபடி; 'இவ்வுலகம்' 'அவ்வுலகம்' என்னும் வழக்கும் இத்திருக்குறளிலேயே (247) வந்தது.

பாக்கியம் :

'அலர் அறிவுறுத்தல்' அதிகாரத்தில் முதற்குறளில் இது வந்தது (1141) நுகர்வதற்குப் பாக்கியாய் நின்றிருந்த பேறுகள்.

மாயம் :

வஞ்சனை; 'பன்மாயக் கள்வன்' (1258); மா—இருள்; கருமை; அறியாமையிருள் கூடியது வஞ்சனையாதலின், அது 'மாயம்' எனப்பட்டது.

முடிப்புரை :

திருக்குறள், உலகுக்கே ஒரு மறை நூலாகவும் முழு நூலாகவும், காலத்தாலும் முதல் நூலாகவும் ஞாலத்தின் முதல் மொழி நூலாகவும்,

மாந்தன் முதன்முதல் தோன்றிய உலகப் பகுதி எதுவோ அதனில் எழுந்ததாகவும்,

அயல் வழக்குகள் தோன்றுவதற்குமுன் எழுந்த தனித் தமிழ் நூலாகவும்,

மனப் பாடத்துக்கும், பாராயணத்துக்கும் ஏற்ற சுருக்கத்தில், கையடக்கமாய்க் குறட்செய்யுளாய், அளவான நூலாகவும், மாந்தர் வாழ்க்கைக்கு வழிகாட்டும் 'வாழ்க்கைமறை'யாகவும், உலகத்துக்கே உச்சியான இமயக்கயிலை மரபில் வந்த அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்மறையாகவும் திகழ்கிறது!

உலகப் பொதுமறை உலகுக்கு ஓர் ஆலமரம்; உலகத்தில் வேறு வேறு மொழிகளிற் பின்னெழுந்த அருள் நூல்கள் அவ்வந் நாட்டுச் சிறப்பு மறைகள்; அவையெல்லாம் ஆலின் விழுதுகள்.

பல்வேறு வகையான உலக மக்கள் எல்லார்க்கும் 'பொது மறை' 'சிறப்பு மறை' என்னும் இந்த இரண்டும் பாராயணத்துக்குரியன.

ஆலின் அடிமரம் இல்லாமல் விழுதுகள் இல்லை. இரண்டும் ஒன்றையொன்று தொடர்ந்தவை; விழுதுகளுக்கு அடிமரம் முக்கியமானது; 'சிறப்பு மறை'களுக்குப் 'பொதுமறை' இன்றி யமையாதது! இந்த அரிய இணைப்பு உணரப்பட்டால் உலகம் ஒற்றுமையுற்று எல்லாம் இனிது தழைக்க வாய்ப்புகள் மிகுதி யாகும். வாழி மறைநூல்; வாழி மன்பதை; வாழி உலகம்!

வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளென்ற திருப்புகழ் முனிவர் பாராட்டும் திருப்புகழ் முனிவர்

[தி. செ. முருகதாச சுவாமிகள்]

திருவருணைத் திருப்புகழ் முனிவர் பாடல்களைப் பாராட்டினர் திருநெல்வேலித் திருப்புகழ் முனிவர். அப்படிப் பாடிய பாடல்கள் சிலவற்றின் கருத்தைச் ''செந்தமிழ்ச் செல்வி'' இதழ். சிலம்பு 49 பரல் 10 வைகாசித் திங்கள் இதழிற்கண்டோம். மேலும் இவ்விதழிற் காணவுள்ளோம். வேலேந்திய முருகன் திருக்கரத்தைப் புகழ்ந்த அருணகிரிநாதரான திருப்புகழ் முனிவர், வேலின் சிறப்பைக் கழறியதோடன்றி வேல் வகுப்பில் முருகனை வணங்கும் அடியவருக்கு இடர் செய்பவரை ஒறுக்க நினைக்கின்றனர். ஆனுல் தன்னுல் முடியாது. அதற்கு வேற்படை தனக்குத் துணையாக நின்று உதவுமென்கின்றனர். பொதுவாக ஒறுப்பது மட்டுமன்று, ''குலத்தை முதல் அற'' என்றே கூறுகின்றனர்.

> ''துதிக்கும் அடியவர்க் கொருவர் கெடுக்க இடர் நினைக்கிலவர்
> குலத்தை முதலறக் களையும் எனக்கோர் துணையாகும்''

என்றனர். அதுமட்டுமன்று,

> ''சொலற்கரிய திருப்புகழை உரைப்பவரை அடுத்தபகை
> அறுத்தெறிய உறுக்கியெழும் அறத்தை நிலை காணும்''

என்றும் ஓதினர். இத்தகைய சிறப்பையெல்லாம் இயல்பாகவே முன்னைய தொடர்பு காரணமாக அறிந்த, தண்டபாணி அடிகள், இளமைக் காலத்திலேயே ''ஆருண்டுக் காலத்திலேயே'' வேலாயுத வழிபாட்டினை ஏற்றனர். இதனை,

> இளநகைச் சிறுமியர்சொல் மொழியினும் தித்தித்
> திருக்கின்ற தமிழ்ம ணத்தால்
> இலகுபொதி யைக்கிரியின் அருகிலுறும் நெல்லையின்
> இடத்திலொரு குழவி யாகி
> வளவிலுள பாலரொடு பலவாறு விளையாடி
> வருகின்ற நாளில் என்னை
> வலியவந் தாட்கொண்டு வேலாயு தப்பூசை
> வாஞ்சைக் கடற்குள் விட்டு''

என்று கூறினர்.

வேலாயுத வழிபாட்டில் தனக்கிருந்த பெருவிருப்பினை, "வேலாயுதப் பூசை வாஞ்சைக் கடற்குள்விட்டு" என்பதால் அறியலாம். தன் இறுதிக் காலம்வரை வேற் பூசனையை இயற்றினர். ஆண்டுக்கொரு வேல் விழுக்காடு புதிதாகச் செய்து வழிபட்டனர். முருக வழிபாட்டுக்கு, வேலொன்றினை வைத்து வழிபடுவதே சாலும் என்பர். வேலின்றி முருகனை வழிபடுவதாற் பயனில்லையென்றும் கூறியதைக் காண வேலின் சிறப்பையறியலாம்.

"வேலின்றிக் கந்தனைப் பூசை செய்தார் பயன் விண் படுமே"

என்பர் வேலலங்கார நூலில். திருவருணைத் திருப்புகழ் முனிவர் வேல் வகுப்பு ஒன்றே பாடினர். திருநெல்வேலித் திருப்புகழ் முனிவர் நூறு பாடலில், வேலலங்காரம் பாடினர். வேலை வைத்து வழிபட்டனர். அந்தப் பெரிய வேலாயுதம், தண்டபாணியடிகள் திருக்கோயிலில் இன்றும் வழிபாட்டில் உள்ளது.

மயில் விருத்தம் பாடினர் அருணகிரிநாதர். மயிலலங்காரம் நூறு பாடல் பாடினர் தண்டபாணியடிகள் அருணகிரிநாதர் பாடிய சித்துவகுப்பு, பூதவேதாள வகுப்பு இவ்விரண்டின் சந்தக் குழிப்பை முதலாக வைத்து முருகன் ஆணைப்படி திருப்புகழ் பாடினர். இதனை,

"பூதவே தாளவகுப் புச்சந்தத் (து) ஓர்புதுப்பாட்டு
ஓதஎன் றுள்தோன்றி உரைத் திட்டான்"

என்று காப்புச் செய்யுள் ஓதி அவ்விரண்டு பெருங் குழிப்பிற் பாடினர். இவர் பாடிய சந்தக் கவிகட்கு, இறுதியில், அவர் போன்று, பெருமாளே யென்றமைக்காமல், "குகவேளே" என்றமைத்தார். முருகவேள் இவரது மன வெளியிற்றோன்றி, நீ முற்பிறப்பில் நம் அருணகிரியேயாதலின், பெருமாளே யென்றமைத்துப் பாடுக என்றபின், அவ்வாறமைத்தனர். அருணகிரிநாதரது மறு அவதாரம் தண்டபாணியடிகள் என்பதைச் சென்ற இதழிற் கண்டோம்.

அருணகிரிநாதர் கலாமிசமாக அவதரித்தவரென்பதனை அடிகள் முழுமையாக ஏற்க ஒப்பினரில்லை. ஏன்? அவ்வாறு முருகன் முன்னிலைப்பட்டுக் காட்சி வழங்கியருளவில்லையே என்ற ஏக்கம் காரணம். அருளுரையைத்தான் ஏற்பது மட்டுமன்று. அன்பர்களும் ஒப்புவர். இது போதாது. அன்பரல்லாதாரும் ஒப்பும்படி திருவருள் சித்தமைய வேண்டுமென்பது அடிகளாரின் கருத்து.

திருஞானசம்பந்தநாயனுர் சமணரைக் கழுவிலிட்டதறிந்த புத்தநந்தியென்பான் மறுத்தபோது, பஞ்சாக்கரத் திருப்பதிகத்தின் ஒரு பாடலை "புத்தர் சமண்கழுக்கையர்" என்று தொடங்குவதைச் சம்பந்தசரணுலயர் கூறியதும், அவன் தலையில் இடி விழுந்ததும்போல, அறிவுச்சுடர் ஏற்படத் தண்டித்தல் வேண்டும். இதை இறைவன் அருள வேண்டினர்.

"பனிவேய் வனத்தில் வந்து நீற்றைக் கொடுத்(து) ஓர்
கிளிதான் எனச்சொல் உன் றன்வார்த்தைக்(கு) இடக்கர்
பழுதோது முற்சிறந்த பேற்றைத்தரற்கு—வருவாயே."

என்பதுபோற் பல பாடலிற் கூறிவேண்டுகின்றதாலறிகிரும்.

திருச்செந்தூருக்கு முருகன் அருளுரைப்படி பதினுறு பிரபந்தம் ஒரு தொகுதியாகப் பாடினர். அதில் ஒன்று "யமக அந்தாதி" இதைப் பாட எண்ணினர். சற்றுச் சோம்பியிருந்தனர் அடிகள். அன்று இரவிற்கண்ட காட்சியின் மாட்சியைக் கூறுகின்றனர்.

"செந்நாவலர்க்கினிய அந்தாதி
வெண்பாச் சிலேடைதிரி வந்தாதியும்
சொல்லியமகத்திலந் தாதிபா
டச்சிறிது சோம்பினேன் அன்றுகுகவேள்
அல்லில் ஒரு பெரியகவி ராயனு
கிப்பாகை அங்கிவட் டக்கடுக்கன்
புல்லிஒளிர் கோலமொடு வந்ததுவும்
ஓதுதி புவித்தலை விளங்கட்டும்சின்
வல்லிதய மும்பெயரும் என்றுன்
ஒரேமோனை வைத்ததும் நுவன்றேனரோ"

அல்லில்-இராப்போதில். வல் இதயம்-கடினமனம்.

"முற்பிற் பகரும்அந் தாதியினும்
இதுமுதிர்ந்த சுவையின தென்றும்என்
அற்பமதி யறியப் பகர்ந்தான்"

என்றவாற்ருல் அறியலாம்.

இதனுல் முற்பிறப்பிற் பகரும் அந்தாதி "கந்தரந்தாதி" அருணகிரிநாதர் பாடியது. அதைவிட இப்பிறப்பிற் பாடிய இந்த யமகஅந்தாதி முதிர்ந்த சுவையினதென்று முருகப்பிரானே கூறினர். பாட்டின் சுவை யறிபவர். முழுதுணர் புலவனல்லவா அவன்.

பாடல் பாடச் சொல்பவனும் பாடுபவனும், சுவையறிபவனும் பாராட்டுபவனும் முருகனேயென்பதால் அடிகள் ஒரு கருவியாயிருந்து ஏட்டில் எழுதுதல் மட்டுமேயென்பது தெளிவு.

''என்பாட லேயென யான்பாடும் பாடல்கள் யாவையும்சேய்
தன்பாட லேயெனச் சாற்றுகின்ருன்''

என்கின்றனர் அடிகள். அருணகிரிநாதர் ''யாமோதிய கல்வியும் எம்அறிவும், தாமே பெற வேலவர் தந்தது'' என்பர். எனவே—திருஞானசம்பந்தர் 'எனதுரையாக' என்று கூறுவதனை ஒப்ப இவ்விரு திருப்புகழ் முனிவர்களும் இறைவன் இயக்க இயங்கும் கருவியாயுள்ளனர் என்பதறியலாம்.

தண்டபாணியடிகள் அருளிய வேலலங்கார நூலில் ஆவது கவி.

'' வண்டுண்ட சோலை அருணை புரிக்கிள்ளை மாதரின்பம்
உண்டுண் டயரினும் வேல்மற வேன்என் றுரைத்தபொருள்
பண்டுண்ட துன்பக் கடல்நீந்தும் தேவர் பரிந்துசெய்யும்
தொண்டுண்ட தாட்குகன் வேலேயென் ருேர்ந்து தொழுகை நன்றே''

மயிலலங்கார நூலில் 31-32-36.

''அம்பிகை யாற்றடைப் பட்டசெவ் வேலன் அருணையிடை
நம்பிய தொண்டன் எதிர்தோன்றச் செய்தநின் வன்கருணை
கம்பிதச் சிந்தை களிகூரு மாறு கருதலென்ருே
வம்பியல் கொங்கை மடவார்கண் டோல்கவரு மயிலே''

''அந்நா ளருணைப் புலவோன் சொல்பாட லதற்கிரங்கி
முந்நான்கு செங்கை முருகோனைக் காட்டினை முற்றும்நம்பும்
இந்நாளென் சொற்புணை நாவிழி வாகுமென் றெள்ளுவையோ
மைந்நாக வெற்பும் மனம்நாணத் தோன்றும் மயிற்றெய்வமே.''

இவ்வாறு பல பாடல்களில், தண்டபாணியடிகளாய திருப்புகழ் முனிவர், அருணகிரிநாதரான திருப்புகழ் முனிவரைப் பல பாடல்களிற் புகழ்ந்து பாராட்டியுள்ளனர். ஐம்பதாயிரம் பாடல்களுள் எல்லாவற்றையும் கண்டெடுத்துரைக்க முடியாமையின் சில கூறலானேன். பிறப்பு, பாட்டொற்றுமை, அருட்பேறு ஆதிய பல ஒற்றுமை இருவரிடத்துமுண்டு.

உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

புல்[6]—துளைத்தற் கருத்து வேர்ச்சொல் (தொடர்ச்சி)

பகு—பா. பாதல்=1. பிளவு படுதல். 2. பிரிவு படுதல்.

பாத்தல்=பகுத்தல். ''தம்மில் இருந்து தமது பாத்துண்டற்றால்'' (குறள். 1107).

பா—பாத்து. பாத்துதல்=பகுத்தல். ''படுதிரை வையம் பாத்திய பண்பே'' (தொல். அகத். 2).

பாத்து=1. பகுக்கை. (சூடா.). 2. பங்கு. (நாமதீப. 741). 3. பாதி. (W.). 4. இணை. ''பாத்தில் புடைவை யுடையின்னா'' (இன். நாற். 3). 5. நீக்கம். ''பாத்தில் சீர்ப் பதுமுகன்'' (சீவக. 1845). 6. நான்கு என்னும் எண்ணைக் குறிக்கும் குழூஉக் குறி. (W).

நானிலம், நால்வகுப்பு, நாற்பா, நாற்பொருள், நால்வகை யுண்டி, நால்வகை யிசைக்கருவி முதலிய பல்வேறு பொருட் பாகுபாடும்; நாலா பேரும், நானா வகை என்னும் வழக்கும்; பகுத்தலைக் குறிக்கும் சொல்லை நான்கு என்று பொருள்படும் குழூஉக்குறி யாக்கின.

பாத்துப்புலு=நாற்பது என்னும் எண்ணைக் குறிக்கும் குழூஉக்குறி. (W.).

பாத்தூண்=1. பகுத்துண்கை. ''பழியஞ்சிப் பாத்தூணுடைத்தாயின்'' (குறள். 44). 2. ஐயம் (பிச்சை). ''பத்தினிப் பெண்டிர் பாத்தூண் நீத்ததும்'' (மணி. பதி. 64).

பாத்து—பாத்தி=1. பகுதி. ''மருவின் பாத்தியிற் றிரியுமன் பயின்றே'' (தொல். தொகை. 30). 2. பங்கு. (W.). 3. இறைவைப் புன்செய்ப் பகுதி, சிறு செய். ''பாத்தியுள் நீர் சொரிந் தற்று'' (குறள். 718). 4. சிறுவீடு. (பிங்.).

ம., க. பாத்தி.

பாத்திப் படுத்துதல்=நிலைபெறச் செய்தல். ''பகைவரைப் பாத்திப் படுப்பதோ ராறு'' (குறள். 465).

பாத்தி—பத்தி=1. பாத்தி. (W.). 2. செய்தித்தாள், பொத்தகம் முதலியவற்றின் நீளவாட்டுப் பகுதி. செய்தித் தாள் பல பத்தி கொண்டது. (உ. வ.). 3. வகுப்பு. (W.). 4. வரிசை. ''பத்திக் கேவணப் பசும்பொற் குடைச்சூல்''

(சிலப். 16 : 118) 4. முறைமை. (சூடா.). 5. அழகு வேலைப்பாடு. "பத்திப் பல்வினை" (பெருங். இலாவாண. 6 : 55). 6. கடவுள்பாற் பட்ட பற்று. "பத்திசெய் யடியரைப் பரம்பரத் துய்ப்பவன்" (திருவாச. 2 : 119). 7. கடவுள் வழிபாடு. (சூடா.). 8. அரசன், ஆசிரியன், தந்தை, கணவன், முனிவன் முதலிய பெரியோரிடத்து வைக்கும் பற்று அல்லது செய்யும் பணிவிடை.

பத்தி (வரிசை)—வ. பங்க்தி (pankti).

பத்தி (பெரியோர் மாட்டுப் பற்று)—வ. பக்தி (bhakti).

இங்ஙனம் இருவேறு வகையில் வடமொழியில் எழுதப் படுவதால், பத்தி என்பது இருவேறு சொல்லோ என்று ஐயுறற்க. பக்தி என்னும் சொல்லிற்கும் பாகம் என்னும் சொல்லிற்கும் வடமொழியாளர் பஜ் (bhaj) என்னும் ஒரே மூலங் காட்டுவதையும், பகு என்னும் முதனிலையினின்றே திரிந்துள்ள பக்கம் என்னும் சொல்லை அவர் பக்ஷ என்று திரிப்பதையும், நோக்குக.

இங்ஙனம், ஒரே முதனிலையினின்று திரிந்துள்ள பல்வேறு திரி சொற்களை, எழுத்துமாற்றி வெவ்வேறு மூலத்தினின்று திரிந்த சொற்களாகக் காட்டுவது, வடமொழியாளர் வழக்கம்.

முத்தம் என்னும் தென்சொல்லை முக்த என்று திரித்தது போன்றே, பத்தி என்ற தென்சொல்லையும் பக்தி என்று திரித்துள்ளனர் வடமொழியாளர்.

பத்தி—பந்தி=மக்கள் உண்டற்கு அமரும் வரிசை அல்லது வரிசைத் தொகுதி. "பந்திக்கு முந்து, படைக்குப் பிந்து." (பழ.) 2. விலங்குகளை நிறுத்தும் ஒழுங்கு. "பண்ணமை வயப்பரிகள் பந்தியினிரைத்தார்" (கம்பரா. வரைக்காட்சி. 13). 3. குதிரைச் சாலை. "இவுளிகள் கன்னு பந்தியிற் கட்டத் தகுமென (திருவாலவா. 27 : 16). ஒ. நோ: கொத்து—கொந்து.

பந்தி—பிரா. பந்த்தி—வ. பங்க்தி.

வடமொழியாளர் பங்க்தி என்னும் சொற்குக் காட்டும் வரலாறு வருமாறு :

பஞ்சன் (பஞ்சம்)=ஐந்து, ஐந்து விரல் போன்ற அல்லது ஐந்து பொருள் கொண்ட வரிசை. பகுத்தறிவுள்ளவர் இதன் புரைமையைக் கண்டு கொள்க.

பாத்து—பாது=பங்கு. "யார்க்கும் பாதிடு முரவோர் போல்" (கோயிற்பு, பதஞ். 82).

பாது—பாதிடு. பாதிடுதல்=1. பங்கிடுதல். 2. வெட்சி மறவர் பகைவர் நாட்டிலிருந்து கவர்ந்த ஆநிரையைத் தமக்குள் பங்கிட்டுக் காத்தல். 3. பாதுகாத்தல். (W.).

பாதிடு—பாதீடு=1. பங்கிடுகை. (யாழ் அக.) 2. வெட்சி மறவர் பகைவர் நாட்டினின்று கவர்ந்த ஆநிரையைத் தம்முட் பகிர்ந்து காத்தலைக் கூறும் புறத்துறை.

"வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந் தோம்பல் மேவற் ருகும்" (தொல். புறத். 2).

"ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே
நோயின் றுய்த்தல் நுவலுழித் தோற்றம்
தந்துநிறை பாதீடு உண்டாட்டுக் கொடையென"
(தொல். புறத். 3).

பாதுகாத்தல்=1. வெட்சி மறவர் தம் ஆநிரைப் பங்கைக் காத்தல். 2. ஆநிரையைப் போல் அரவணைத்துக் காத்தல். (W.). 3. வாராமல் தடுத்தல். "அதனைப் பாது காத்துக் கடிதற்பொருட்டு" (குறள். 11. முகவுரை). பாது காவல்=பாதுகாப்பு. பாது=காவல். (யாழ். அக.).

பாதுகாத்தல் என்பது நிலைச் சொல்லின் பொருள் மறைந்து நன்கு காவல் காத்தல் என்று பொருள் பட்டதனால், பாது என்னுஞ் சொற்குக் காவல் என்னும் பொருள் கூறப் பட்டது.

(பள்—பண்—பணி—படி)

கீழ்ப்படிதல்=அடங்கி நடத்தல், பணிவாயிருத்தல். படி= 1. நீர் நிலை. (யாழ். அக). 2. தாழ்வாரம். (யாழ். அக.). 3. இருதிணைப் பொருள்களும் படியும் அல்லது தங்கும் இட மாகிய ஞாலம்.

ஞாலத்தைக் குறிக்கும் படி யென்னும் சொல், ப்ருத்வீ என்னும் வடசொல்லின் திரிபாகச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகரமுதலியிற் காட்டப் பட்டுள்ளது. புடவி என்னும் தென் சொல்லே, ப்ருத்வீ என வடமொழியில் திரிக்கப் பட்டுள்ளது.

படிகாலி=தட்டையாய்ப் படிந்திருக்கும் பாதமுடையவ—ன்—ள். (நாஞ்).

படி—பதி. பதிதல்=1. நாள் கோள் முதலியன இறங்குதல். (W.). 2. பள்ளமாயிருத்தல் பதிந்தநிலம். (உ. வ.). 3. முத்திரை உருவம் முதலியன அழுந்துதல். 4. ஆழ்தல். வண்டிச் சக்கரம் சேற்றிற் பதிந்துவிட்டது. (உ. வ.).

5. குழித்தெழுதுதல். 6. எழுதுதல். 7. ஊன்றுதல். மனம் பாடத்திற் பதிந்ததா? (உ. வ.) 8. விலை தணிதல். விலையைப் பதியக் கேட்டான். (உ. வ.). 9. தங்குதல். ''பதிசென்று பதிந்தனன்'' (தணிகைப்பு. பிரமன். 2). 10. நிலையா யிருத்தல். எனக்கு இன்னும் எங்கும் பதிந்த வேலையில்லை. (உ. வ.). 11. அமைதியாதல். பையன் பள்ளிக்கூடத்திற் பதிந்திருக்கிறான். (உ. வ.).

பதி—வ. பத்.

பதித்தல்=1. தாழ்த்துதல். 2. அழுத்துதல். ''பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி'' (திருவாச. 11 : 12). 3. பதியம் போடுதல். 4. மணி முதலியன இழைத்தல். 5. குழித்தல். 6. குழித்தெழுதுதல். 7. எழுதுதல்.

பதிவு=1. வான் மீன்களின் இறக்கம். 2. பள்ளம் நிலம் பதிவாயிருக்கிறது. (உ. வ.). 3. திங்கள் எழு முன்னை நிலை. 4. அழுந்துகை. 5. பதுக்கம். 6. பதியம். 7. நிலைவரம். அவன் அந்த ஊரில் பதிவாயிருக்கிறான். (உ. வ.). 8. மனம் ஊன்றுகை. 9. அமைதி. 10. பதிவேட்டில் எழுதப்படுகை. 11. விலை தணிவு.

பதிவு சாப்பாடு=உண்டிச் சாலையில் மாதக் கணக்கில் நிலையாகச் சாப்பிடுதல்.

பதி=1. அழுந்துகை. ''நுண்ணிலைவேல் பதிகொண்டு'' (சீவக. 1186). 2. பதியம். 3. நாற்று. 4. பதிவிளக்கு. (W.). 5. உறைவிடம். ''பதியிற் கலங்கிய மீன்'' (குறள். 1116). 6. வீடு. (திவா.). 7. கோயில். (சங். அக.). 8. நகர். ''பதியெழு வறியாப் பழங்குடி'' (சிலப். 1 : 15). 9. ஞாலம்.

பதி—பதம்=1. நிலத்திற் பதியும் உறுப்பாகிய கால். ''மதுருக ரறுபத முரல்'' (தேவா. 568 : 5). 2. காலின் அடிப் பகுதியாகிய பாதம். 3. செய்யுளடி. (W.). 4. நாலிலொன்று. (பிங்.). 5. நிலை. 6. இடம். ''பதங்களேழும்'' (தக்கயாகப். 147). 7. பதவி. ''பிரிவில் தொல்பதந் துறந்து'' (கம்பரா. திருவடி சூட்டு. 101). ''சிவபத மளித்த செல்வமே'' (திருவாச. 37 : 3).

பதம்—வ. பத, L. *pedis*.

பதம்=1. (பள்ளத்தில் நிற்கும்) நீர். (திவா.). 2. ஈரம். (திவா.) ''மாவெலாம் பதம்புலர்ந்த'' (கம்பரா. மூலபல. 79). 3. நீரின் மென்மை. 4. மெல்லிய பதம். ''சில்பத வுணவின்'' (பெரும்பாண். 64). 5. (வெந்து மெல்லிய) அவிழ். (சூடா.).

6. சோறு (திவா.). 7. உணவு. ''பதமிகுத்துத் துய்த்தல் வேண்டி'' (சிலப். 28 : 189). 8. நீர்ப்பதமான கள். ''மகிழ்ப் பதம் பன்னாட் கழிப்பி'' (பொருந. 111). 9. பதநீர். 10. பதநீரின் இனிமை. 11. இன்பம். (சூடா.). 12. ஏற்ற சமையம்.

பதம் பார்த்தல்=1. வேகும் உணவின் நிலைமையை அறிதல். 2. மக்களின் நிலைமையை ஆராய்ந்தறிதல்.

பதி—பதனம்=1. இறக்கம். (யாழ். அக.). 2. தாழ்மை. (சங். அக.). 3. அமைதி. 4. பாதுகாப்பு. கண்ணாடியைப் பதனமாகக் கொண்டுவா. (உ. வ.).

பதனம்—வ. பதன.

பதம்—பாதம்=1. காலின் அடிப்பகுதி. ''பாதக் காப்பினள் பைந்தொடி'' (சிலப். 14 : 23). 2. விளக்குத் தண்டின் அடிப்பகுதி. பாதம் வைத்த விளக்கு. (உ. வ.). 3. அடிச்சுவடு. 4. செய்யுளடி. ''வாங்கரும் பாத நான்கும் வகுத்த வான்மீகி'' (கம்பரா. நாட்டுப். 1). 5. காற்பங்கு. ''முன்னைப் பீடத்தின் பாதங் குறைந்து'' (மேருமந். 1172). 6. பணி (சரியை , பத்தி (கிரியை), ஓகம் (யோகம்), ஓதி (ஞானம்) என்னும் நால்வகைச் சிவநெறி யொழுக்க நிலை.

பாதம்—வ. பாத, Gk. *podos*, *OS*, *OE*, *fot*, *OHG*. *fuoz*, *ON*, *fotr*, *Goth*, *fotus*, *E*, *foot*.

பாதம்—பாதை=நடப்பவர் பாதம் படுவதால் அமையும் வழி. ஒ. நோ: தடம்=அடிச்சுவடு, வழி.

OE, *E*. *path*, *OLG*. *pad*, *OHG*. *pfad*.

பாதம் என்னும் சொல் வடமொழியிற் பெருவழக்காய் வழங்குவதனாலும், பொய்யுடை வடமொழியர் சொல் வன்மையாலும், ஆழ்ந்த ஆராய்ச்சியின்மையாலும், தமிழ்ப் பேராசிரியர் பலரும் அது வடசொல்லென்றே கருதிக் கொண்டிருக்கின்றனர். அடி என்பது, ஒன்றன் கீழ்ப் பகுதியையுங் கீழிடத்தையுமேயன்றி, பாதம் என்னும் சினைப் பகுதியைக் குறிப்பதாகாது. பாதை யென்னும் சொல் வடமொழியிலின்மையும் இதை வலியுறுத்துஞ் சான்றாகும்.

படு—பது—பதுங்கு. பதுங்குதல்=1. பதிவிருத்தல். ''பதுங்கிலும் பாய்புலி'' (திருமந். 2914). 2. ஒளிதல். ''அரண்புக்குப் பதுங்கினானே'' (கம்பரா. அங்கத. 31). 3. மறைதல். ''பருதியை முகின் மறைப்பப் பாயொளி பதுங்கினாற் போல்'' (சி. சி. 2 : 83). 4. பின்னிற்றல்.

பதுங்கு=பதிக்கும் குத்துக்கல் வரிசை.

பதுங்கு பிடித்தல்=மேற்றளத்திற்குச் செங்கற் பாவுதல்.

பதுங்கூன்றுதல்=பதுங்கு பிடித்தல்.

பதுங்கு—பதுங்கி=1. பின்னிற்பவன். 2. கூச்ச முள்ளவன்.

பதுங்கல்—பதுங்கலன்=பதுங்கி.

பதுங்கு—பதுக்கு—பதுக்கம்=1. ஒளிகை. 2. கரவு. பதுக்கமாய் நடக்கிறான். (W.). 3. எய்தல் பாய்தல் முதலிய வற்றிற்குப் பதுங்குகை. 4. பின்னிற்கை. (W.). 5. வணிகப் பொருள்களை அல்லது திருட்டுப் பொருள்களை மறைத்து வைக்கை.

பதுக்குதல்=ஒளித்தல்.

பதுக்கு—பதுக்கை=போரிற்பட்ட மறவரை அல்லது காட்டு விலங்காற்கொல்லப்பட்டவரை மறைக்குங் கற்குவியல். "பதுக்கைத் தாய வொதுக்கருங் கவலை" (ஐங்குறு. 362). 2. மணற்குன்று. "பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி" (புறம். 264). 3. இலைக்குவியல். "பதுக்கை நிரைத்த கடுநவை யாராற்று" (கலித். 12 : 2). 4. சிறுதூறு. (திவா.). உவலைப் பதுக்கை முரம்பு. (தஞ்சைவா. 363). 5. பாறை. (பிங்.). "பாடலம் புனைந்தகற் பதுக்கையிவ் விடனே" (கல்லா. 6.)

பதுக்கைக் கடவுள்=மணற்குன்றின் மேலுள்ள நடுகல் தெய்வம். "வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்" (அகம். 35).

பள்—படு. படுதல்=1. விழுதல். 2. தொங்குதல். "படுமணி யிரட்டும்" (திருமுரு. 80). 3. சாய்தல். "படாஅ முலைமேற் றுகில்" (குறள். 1087). 4. கிடத்தல். 5. கதிரவன் அடைதல், படுஞாயிறு. "சுடர் நோக்கி மலர்ந்தாங்கே படிற் சாம்பு மலர்" (கலித். 78). 6. சாதல். "காதலி நீபட்டதூஉம்" (சிலப். 29. அடித்தோழி யரற்று). 7. அழிதல். "படாஅச் செலியர்நின் பகைவர் மீனே" (புறம். 24). 8. துன்பப்படுதல். "படுவேன் படுவதெல்லாம்" (திருவாச. 50 : 4). 9. வாடுதல். 10. நிலைத்திணை சாதல். மரம் பட்டுவிட்டது. (உ. வ.). 11. புண் ஆறுதல். புண்பட்டுப் போயிற்று. (உ. வ.). 12. புகுதல். "நாடுபடு செலவினர்" (புறம். 240). 13. அகப்படுதல். எலி பொறியிற் பட்டுவிட்டது. (உ. வ.). 14. புதைக்கப் படுதல். "படுபொருள் வவ்விய பார்ப்பான்" (சிலப். 23 : 102). 15. பெய்தல். "படுமழை யாடும் வரையகம்" (கலித். 103 : 20).

படுத்தல்=1. விழச் செய்தல். எறிந்து களம் படுத்த ஏந்துவாள் வலத்தர். (புறம். 19). 2. எழுத்தொலியைத் தாழ்த்தி யொலித்தல். "படுத்துக் கூற" (தொல். எழுத். 76, உரை). 3. மட்டமாக்குதல். 4. தளவரிசை செய்தல். "எண்டிசையு மேற்பப் படுத்து" (சீவக. 592). 5. கிடத்தல். "அரியுந்தன் ஆழிபடான்" (குலோத். கோ. 165). 6. அழித்தல். "எதிர்ந்தோர் தம்மைப் படுத்தலும்" (கம்பரா. மூலபல. 56). 7. ஒழித்தல். "காப்படுப்பின்" (சிறுபஞ். 40). 8. துன்பப் படுத்துதல். அந்த வீட்டில் மருமகளை மிகவும் துன்பப்படுத்துகிறார்கள். (உ. வ.).

பட்டவன் குறி=போரில் இறந்தவர்க்கு அடையாளமாக நட்ட கல். (G. Tp. D. I. 90).

பட்டபாடு=அடைந்த துன்பம், "உண்டிருப்பதற்கே துணிகின்றான் பட்ட பாடே" (பாரத. கிருட்டிண. 16).

படு—படுக்கை=1. படுத்துக்கிடக்கை. 2. படுக்கும் பாய் அல்லது மெத்தை. 3. சரக்கு மூட்டைமேல் நீர் படாதிருக்குமாறு தோணியின் அடியிற் பரப்பும் புல் அல்லது ஓலை. (W.). 4. பொருள்கள் வைத்தற்கு ஏற்றவாறு அடியிற் பரப்பிய ஓலை அல்லது வைக்கோல். 5. தெய்வங்கட்குப் படைக்கும் படையல். (நாஞ்.). 6. சிற்றூர்த் தெய்வங்கட்குச் செய்யும் ஒருநாள் விழா.

படுக்கையறை=பள்ளியறை.

படுக்கையிற் போடுதல்=நெட்டுக்குத்தாக நிற்பதைப் படுகிடையில் அல்லது நீளவாட்டில் வைத்தல்.

படுக்கைப் பற்று=1. சீர் வரிசை (சீதனம்). "தன் ராஜ்யத்தை அவர்களுக்குப் படுக்கைப் பற்றாக்கி" (ஈடு. 4 : 1 : 5). 2. உவளகம் (அந்தப் புரம்). "நாங்கள் படுக்கைப் பற்றில் உள்ளோம்" (ஈடு. 4 : 8 : 1).

படுக்கை மரம்=தோணியிற் பண்டங்களை வைக்குமாறு அமைக்கும் பலகை. (W.).

படுகட்டை=1. உலர்ந்த மரத்துண்டு. (W.). 2. பயனற்ற கிழவன் அல்லது கிழவி. (யா.).

படுகண்=படுகண்ணி. படுகண்ணும் கொக்குவாயும் உட்படநிறை. (S. I. I. ii, 157).

படுகண்—படுகண்ணி=அணி கலத்திற் கொக்குவாய் மாட்டப்படும் உறுப்பு. "கொக்குவாயும் படுகண்ணியும் போலே" (திவ். பெரியதி. 5 : 4 : 7. வ்யா.).

படு—படுகர்=1. பள்ளம். (திவா.). ''தான்விழும் படுகர் விழ்த்தான்'' (குற்ரு. தல. புட்பகந்த. 16). 2. நீர்நிலை. (பிங்.). ''தத்துநீர்ப் படுகர்'' (திருவிசைப். கருவூர். 8 : 9). 3. வயல். (W). 5. மருதநிலம், ''பூம்படுகர்ப் பகட்டினங்கள்'' (காஞ்சிப்பு. திருநாட்டு 131). 6. ஏற்றிறக்கமான வழி. ''ஆரிப்படுகர்ச் சிலம்பு'' (மலைபடு. 161).

படுகல்=நீர்நிலை. ''பூம்படுகல் லிளவாளை பாயும்'' (தேவா. 82 : 2).

படுகளம்=புண்பட்டு விழும் அல்லது இறக்கும் போர்க்களம். ''உலக மேத்தும் படுகளங் கண்டு'' (சீவக. 17).

படுகாடு=1. மரங்கள் ஒருசேர விழுந்த காடு. (திவ். திருப்பா. 6 : 95, வ்யா). 2. சுடுகாடு. ''படுகாட்டகத் தென்று போர் பற்ருெழியீர்'' (தேவா. 879 : 6).

படுகாடு கிடத்தல்=ஒரு சேர விழுந்த மரங்கள் போலச் செயலற்றுக் கிடத்தல். ''பறவையின் கணங்கள்..........படுகாடு கிடப்ப'' (திவ். பெரியாழ். 3 : 6 : 8).

படுகிடை=1. நோய் மிகுதியால் எழ முடியாமற் படுக்கையிற் கிடத்தல். 2. தன் எண்ணம் நிறைவேற ஒட்டாரமாய்ப் படுத்துக் கிடக்கை.

படுகுடி=கெடுகுடி. (யாழ். அக.).

படு—படுகை=1. ஆற்ருேரத்துத் தாழ்ந்த நிலம். 2. நீர்நிலை. ''பழைய பாகீரதிப் படுகை மேல்'' (திருப்பு. 493).

படு—படை படைத்தல்=மக்கட்கு முன் அல்லது தெய்வப் படிமைக்கு முன் உணவு இடுதல். இடுதலென்பது கீழ்வைத்தல்.

படை—படையல்=உணவு தெய்வப் படிமைக்கு முன் இடுதல்.

படு—பாடு=1. விழுகை. ''காடுகழி யிந்தனம் பாடுபார்த் தெடுத்து'' (தனிப்பாடல்), ''நொச்சிப் பாடோர்க்குஞ் செவியோடு'' (கலித். 46). 2. கதிரவன் விழுந்து மறைதல். ''செங்கதிர்ச் செல்வன் எழுச்சியும் பாடும்'' (பெருங். வத்தவ 2 : 87). 3 கீழோரை (நீசராசி). ''பார்க்கவனுர் பாகுச்சி சேருங்கால்'' (சினேந். 207). 4. படுக்கை நிலை. ''பன்னு ளாயினும் பாடு கிடப்பேன்'' (மணி. 18 : 158). 5. தூக்கம். ''பாடின்றிப் பசந்தகண்'' (கலித். 16). 6. சாவு. ''அபி மன்னுவின் பாடு'' (பாரத வெண். 813, குறிப்பு). 7. கேடு ''ஆடுறு குழிசி பாடின்று தூக்கி'' (புறம். 371). 8. குறைவு.

அளவு பாடு. (உ. வ.). 9. வருத்தம். "தம்பா டுரைப்பரோ தம்முடையார்" (நாலடி. 292). க. பாடு. 10. உழைப்பு. "பாடு பட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்து" (நல்வழி. 22). 11. கருமம் (காரியம்). அவனவன் தன்தன் பாட்டைக் கவனிக்க வேண்டும். (உ. வ.). 12. தாழ் மட்டம்.

தெ. பாடு, க. பாடு, ஹாடு.

பாடு காட்டுதல்=பக்கஞ் சரிந்து கிடத்தல். 2. நீட்டமாகக் குப்புற விழுதல்.

பாடு காட்டி விழுதல்=சாய்ந்து விழுதல். (W.).

பாடு கிடத்தல்=தெய்வத்திற்குமுன் நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து வரங்கிடத்தல். "பாசண்டச் சாத்தற்குப் பாடு கிடந்தாளுக்கு" (சிலப். 9 : 15).

பாடு படுதல்=1. வருந்தி யுழைத்தல். "பாடில்லாமற் பயனில்லை". (பழ.). 2. துன்பப்படுதல். கொடுங்கோல் மன்னர் ஆட்சியில் குடிகள் மிகப் பாடுபடுவர். (உ. வ.). 8. வாரத்திற்குப் பயிரிடுதல். நீ யார் நிலத்திற் பாடு படுகிறாய்? (நெல்லை வட்டார வழக்கு).

பாடு பார்த்தல்=ஒருவரது கருமத்தைக் கவனித்தல்.

பாடு பிடித்தல்=நீரில்லாமையாற் பயிர் பட்டுப் போதல்.

பாடாற்றுதல்=துன்பம் பொறுத்துக் கொள்ளுதல். "சிலநா ளாற்றுமை யோடே பாடாற்றிக் கிடந்தார்." (ஈடு. 5 : 3 : 1).

பாடு–பாடி=மிகத் தாழ்மட்டமான கூரை வீடுகள் சேர்ந்த முல்லை நிலத்தூர். (திவா.). 2. இடையர் குடியிருப்பு. ஆயர் பாடி (திவ். நாய்ச். 14 : 2). 3. சிற்றூர். 4. பாசறை. "பாடி பெயர்ந்திட்டான் பல்வேலான்" (பு. வெ. 3 : 10) 5. சேனை. 6. ஊர். 7. நகரம். "பாடி விழாக்கோள் பன்முறை யெடுப்ப" (சிலப். உரைபெறு. 3). 8. உள்படும் உளவாளி.

ம., க. பாடி, தெ. பாடு.

பாடி காவல்=1. ஊர்க்காவல். (கல்வெட்டு). 2. தலையாரி. 3. ஊர் காவற்கு வாங்கும் வரி. (S. I. I. i, 89). 4. வழக்குத் தீர்த்து இடும் தண்டனை. "பாடி காவலிற்பட்டுக் கழிதிரே" (தேவா. 232 : 2). 5. பாடிப்பேச்சு=ஊர்ப்பேச்சு, வீண்பேச்சு. (நாஞ்.).

பாடி மாற்றம்=உலக வழக்குச் சொற்கள் (தொல். செய். 240, உரை).

பாடி வீடு=பாசறை. "பாடி வீட்டினை வலஞ் செய் கின்றான்." (கம்பரா. விபீடண. 151).

பாடி—வாடி=1. முல்லை நிலத்தூர். 2. இடையர் குடி யிருப்பு. 3. சிற்றூர் பட்டி. 4. ஊர். 5. பாசறை. 6. இடையர் மாட்டுத் தொழுவம். 7. காணிக் காரரின் புல் வேய்ந்த மூங்கிற் குடிசை. (G. Tn. D. 1 : 7). 8. சாவடி. 9. அடைப்பிடம். 10. மரமண்டி. எ-டு. மரவாடி, விறகுவாடி.

பாடி வாசல்—வாடி வாசல்=1. முல்லைநில மாட்டுத் தொழுவ வாசல். 2. இடையர் குடியிருப்பு வாசல். 3. சல்லிக் கட்டுக் காளைகளை அடைத்து வைத்திருக்கும் தொழுவ வாசல். 4. பாசறை வாசல். 5. அரண்மனை வாசல்.

பாடி வீடு—வாடி வீடு=1. பாசறை. 2. அரசன் தங்கல் மனை. 3. சாவடி.

பாடு—பாடை=காலில்லாத மிகத் தாழ்வான பிணக் கட்டில். "உயர் பாடைமேற் காவுநாள்" (தேவா. 927 : 3).

தெ. பாட.

பாடைச்சுழி—மாட்டின் நடுமுதுகந் தண்டிற்கு வலப்புற முள்ள தீச்சுழி வகை. (அபி. சிந். 788).

பாடையவரை=பாடவரை. (நாஞ்.).

பாடோடிக் கிடத்தல்=1. பாடு கிடத்தல். 2. துயரத்தினாற் படுகிடையாய்க் கிடத்தல். "நான் பாடோடிக் கிடந்தேன்" (ஈடு, 6 : 8 : 4).

பது—பாது—பாந்து. பாந்துதல்=பதுங்குதல். (சூடா). "ஆந்தை பாந்தியிருப்ப" (கலிங். 127, புதுப்.).

பாந்து—பாந்தல்=பதுங்குகை. (சூடா.).

பாந்தல்—பாந்தள்=1. (புல்லுள்ளும் செடிகளுள்ளும் பதுங்கியிருக்கும்) பாம்பு. "பாந்தளஞ் சடில முக்கட் பாவலன்" (திருவாலவா. 16 : 32). 2. மலைப்பாம்பு. "கானிடைப் பாந்தள் கண்படுப்பன" (சீவக. 1900).

பாந்து என்னும் சொல்லிற்குப் பொந்து என்னும் பொருளு முண்டு. மலைப்பாம்பு பொந்திற்குள் இராமையின், பதுங்குதற் பொருளே பொருத்தமானதாகக் கொள்ளப்பட்டது,

———

குடாவடி உளியம்

[பி. எல். சாமி, பி. எஸ்.ஸி.]

சிலப்பதிகாரத்தில் காட்சிக்காதையில் 'குடாவடி உளியம்' என்ற பெயர் கரடியின் பெயராகப் பயில்கின்றது. மலைவாழ் குறவர் செங்குட்டுவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்த பல பொருள்களுள் சில விலங்குகளும் பறவைகளும் கூறப் பட்டுள்ளன.

"ஆளியி னணங்கு மரியின் குருளையும்
வாள்வரிப் பறழும் மதகரிக் களபமும்
குரங்கின் குட்டியுங் குடாவடி யுளியமும்
காசறைக் கருவு மாசறு நகுலமும்
பீலி மஞ்ஞையு நாவியின் பிள்ளையும்
கானக் கோழியுந் தேன்மொழிக் கிள்ளையும்"

—சிலம்பு. - காட்சிக்காதை, 48-54.

காட்சிக்காதையில் கூறப்பட்டுள்ள விலங்குகளில் ஆளியின் அணங்கு கற்பனை விலங்காகத் தெரிகின்றது. சிங்கம் தென் னாட்டில் என்றுமே இயற்கையில் வாழாத விலங்காதலால் அரியின் குருளை என்று காட்சிக்காதையில் கூறப்பட்ட விலங்கும் கற்பனைச் செய்தியே யென்று கொள்ளலாம். அரியின் குருளைக்குப் பின்னர்க் குறிப்பிடப்பட்ட வேங்கைப் புலிக்குட்டியும், யானைக்கன்றும், குரங்கின் குட்டியும், கரடிக்குட்டியும், வரையாடு வருடையும், மடமான் மறியும் இயற்கையில் தமிழ் நாட்டு மலைக் காடுகளில் கிடைப்பனவாகும். ஆனால் இவற்றுக்குப் பின்னர்க் கூறப்பட்ட காசறைக்கரு என்ற கத்தூரி மான்குட்டியைத் தமிழ் நாட்டில் இயற்கையில் காணமுடியாது. கத்தூரிமான் இந்தியாவில் காசுமீரத்து மலைக்காடுகளில் மட்டுமே இயற் கையில் காணப்படுவதால் இந்த விலங்கைக் காட்சிக்காதையில் கூறிய செய்தி கற்பனையானதே. நகுலமெனும் கீரியும் மஞ்ஞையும் நாவியின் பிள்ளையான புனுகுப்பூனைக் குட்டியும் காட்டுக்கோழியும் கிள்ளையும் தென்னாட்டு மலைகளில் காணப் படுவன.

காட்சிக்காதையில் கூறப்பட்ட விலங்குகளில் கரடியைக் 'குடாவடி உளியம்' என்று இளங்கோவடிகள் அழைக்கின்றார். உளியம், எண்கு என்பன கரடியின் பெயராகச் சங்க நூல்கள் பயில்கின்றன. அரும்பத உரையாசிரியர் குடாவடி உளியம்

என்ற சொல்லைத் திசைச்சொல் என்று குறிப்பிட்டு, பிள்ளைக் கரடி, கரடிக்குட்டி என்று பொருள் கூறியுள்ளார். அரும்பத உரையாசிரியருக்குப் பின்னர் வந்த நச்சினார்க்கினியர் குடாவடி என்ற சொற்கு வேறு பொருளைக் கூறியுள்ளார். குடாவடி என்ற சொல் பத்துப்பாட்டில் மலைபடுகடாத்திலும் திருமுருகாற்றுப்படையிலும் வருகின்றது. மலைபடுகடாத்தில் சொல்லப்பட்டுள்ள விலங்குகள், பறவைகள் எல்லாம் தமிழ்நாட்டு மலைகளிலும் காடுகளிலும் இயற்கையில் காணப்படுவனவாகும். ஆமான், கயமுனிக்குழவி, ஊமை எண்கின் குடாவடி உளியம், வரைவாழ்வருடை வன்றலை மாத்தகர், அராவுக் குறும்பெறிந்த சிறுகண் தீர்வை, அளைச்செறி உழுவை, மரையான் பெருஞ் செவிக்குழவி, உடும்பின் கொடுந்தாள் ஏற்றை, மடக்கண் மஞ்ஞை, கானக்கோழியின் கவர்குரல் சேவல் ஆகியவை தமிழ் நாட்டில் வாழ்வனவாகும். மலைபடுகடாத்தில் கரடியின் குட்டியானது 'ஊமை யெண்கின் குடாவடிக்குருளை' என்று அழைக்கப் பட்டுள்ளது. கரடியை ஊமை எண்கு என்றழைத்தது பொருத்தமே. கரடி பொதுவாக வாய்விட்டு ஓசை செய்வதில்லை என்று கூறுவர். கரடியைத் தாக்கினாலோ ஊறு செய்தாலோ ஓசையுடன் கத்தும் என்பர். குடாவடிக் குருளை என்பது குட்டியைக் குறிக்கும். ஆனால் அரும்பத உரையாசிரியர் குடாவடி உளியம் என்ற பெயரில் குடாவடி என்ற சொல் குட்டியைக் குறிக்கும் என்றும் அச்சொல் திசைச்சொல் என்றும் கொண்டுள்ளார். நச்சினார்க்கினியர் எண்கின் குடாவடி ஊமைக்குருளை என்று கொண்டு கரடியின் வளைந்த அடியினை யுடைய வாய் திறவாக் குட்டி என்று உரை எழுதியுள்ளார். நச்சினார்க்கினியர் கூறின பொருள் இயற்கைக்குப் பொருத்த மானதாகத் தெரிகின்றது. ஆனால் கரடியின் குட்டிக்குத்தான் வளைந்த அடி இருப்பதாக நச்சினார்க்கினியர் கூறியது சரியான தாகத் தெரியவில்லை. திருமுருகாற்றுப்படையில் குடாவடி உளியம் என்ற சிலப்பதிகாரப் பெயர் வருகின்றது.

> *"இரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன*
> *குரூஉ மயி ரியாக்கைக் குடாவடி யுளியம்*
> *பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட் (டு)"*
>
> —*திருமுருகாற்றுப்படை 312—314.*

திருமுருகாற்றுப்படையின் உரையிலும் நச்சினார்க்கினியர் குடாவடி உளியம் என்ற பெயருக்கு வளைந்த அடியுடைய கரடி என்று உரை கூறினர். ஆனால் திருமுருகாற்றுப்படையில் வேறுரையில் குடமுழவு போன்ற அடி என்று உரை கூறப் பட்டுள்ளது. இதை உ. வே. சாமிநாதய்யர் அடிக்குறிப்பில்

காட்டியுள்ளார். குடம் என்று கொண்டு குடமுழவு போன்ற அடி என்று கூறியது முற்றிலும் பொருத்தமற்றதாகும். கரடியின் காலடி குடமுழவு போன்று பருத்துக் காணப் படுவதில்லை.

குடாவடி என்பதற்குப் பொருத்தமான இயற்கையான பொருள் என்னவென்று ஆராய்ந்தால் இச் சொல்லின் பொருட் சிறப்பு விளங்குகின்றது. சங்க நூல்களில் விலங்கு, பறவை, செடிகொடிகள் ஆகியவற்றிற்குக் கூறப்பட்ட அடைமொழிகள் அவற்றின் சிறப்பு இயல்புகளைச் சுட்டிக்காட்டுவனவாகவே அமைந்துள்ளன. குடா, குடம் என்ற சொற்கள் வளைவுப் பொருளைக் குறிக்கும். அப் பொருளின் வளர்ச்சியாக உள்ளே வளைந்த, உள்ளே குவிந்த என்ற பொருளையும் இச்சொல் குறிக்கும். ''அடங்கா வேட்கையின் அறிவஞர் எய்திக், குடங் கையின் நொண்டு கொள்ளவும் கூடும்'' (10-85-86) என்று வரும் சிலப்பதிகார வரியில் குடங்கை என்ற சொல் உள்ளங்கை என்ற பொருளில் வந்திருப்பதை அறியலாம். குடங்கையாவது ஐந்து விரலுங் கூட்டி உட்குழிப்பது என்று அடியார்க்கு நல்லார் உரை கூறியுள்ளார். உள்ளங்கையால் மொண்டு என்பதே பொருளாகும். பேச்சுவழக்கில் உள்ளங்கை, உள்ளங்கால் என்று சொல்கிறோம். ஆதலின் குடாவடி உளியம் என்ற சொற்குப் பொருள் உட்குவிந்த உள்ளடியுடைய கரடி என்பதே யாகும். குட + அடி என்பதே குடாவடி ஆயிற்று. வளைந்து குவிந்த உள்ளங்கால்களையுடைய கரடி என்று பொருள் கொள்ள வேண்டும். முதுகெலும்புடைய விலங்கு களின் வளர்ச்சி வரிசையின் உச்சியில் குரங்கு இனமும் மனித இனமும் உள்ளன. மனிதனும் குரங்குமே நடக்கும்போது தரையில் பாதத்தை ஊன்றி, உள்ளடியை ஊன்றி நடப்பார்கள் என்று விலங்கு நூலார் கூறுவர். மற்ற விலங்குகள் பெரும் பாலும் விரல்களை ஊன்றியே நடக்கின்றன. அதற்கேற்ப விலங்குகளின் விரல்கள் அமைந்துள்ளன. விலங்குகளில் கரடி உள்ளங்கால்களைப் பதித்து நடக்கும் தன்மையுடையதென்பர். (The Bear family is plantigrade placing the whole sole of the foot on the ground in walking. Their tracts are very like those made by the human bare foot.—"Mammalia of India'' by Frank Spinn) மனிதனின் கால்சுவடும் கரடியின் கால் சுவடும் ஏறக்குறைய ஓரளவினவாகவும் உருவினவாகவும் உள் ளன என்று கூறுவர். இமயமலைப் பனிக்கட்டியில் 'யேட்டி' (Yeti) என்ற பழங்கால மனிதன் வாழ்வதாக ஒரு செய்தி அடிக்கடி நாளிதழ்களில் அடிபடுகின்றது. பனிமலையில் நடக்கும் கரடி

களின் அடிச்சுவடே இவ்வாறு மயங்கவைத்ததாக அறிவியல் அறிஞர் கூறுகின்றனர். கரடிக்கு மரத்தில் ஏறுவதற்கு ஏற்ற தாக அதன் காலடிகள் உட்பக்கமாகக் குவிந்து இருக்குமென்று கூறுவர். பூனையும் நாயும் நடக்கும்போது விரல்களால் நடப்பதாக (digitigrade) விலங்குநூலார் கூறுவர். இவற்றில் உள்ளங் காலோ பாதமோ தரையில் படிவதில்லை. ஓடுவதற்காகவும் பாய்வதற்காகவும் பூனைக் குடும்பத்திலும் நாய்க்குடும்பத்திலும் உள்ள விலங்குகளுக்குக் காலடி அமைந்துள்ளது. கரடிகளுக்குக் கால்கள், தோண்டுவதற்கும் மரத்தில் ஏறுவதற்கும் ஏற்றதாக அமைந்துள்ளன. கரடி பருத்த உடலுடைய விலங்காதலால் மரத்தில் ஏறுவதற்குப் பொருந்த உட்குவிந்து பற்றி ஏறு வதற்குத் தகுந்தவாறு காலடி அமைந்துள்ளது. (Hence, the bear's massive limbs, which carry its heavy body up rocks and cliffs and trees, its in turned paws which secure a better hold on branch or trunk and its great claws which help to climb and dig.—"The Book of Indian Animals" by H. S. Prater). கரடி புலிபோல ஓடுவதோ பாய்வதோ இல்லை. கரடி தரையில் நன்ருக விரல்களையும் உள்ளடியையும் ஊன்றி நடக் கும். கரடிக்கு உள்ளங்கால் உட்பக்கமாக வளைந்து மரங்களில் பற்றி ஏறுவதற்கு ஏற்ப அமைந்திருப்பதால் 'குடாவடி' என்று கரடியின் உள்ளங்காலைக் குறிப்பிட்டு அழைத்தனர். இந்தப் பொருளின் நுட்பத்தை உணராது பிற்காலத்தில் உரையாசிரியர் மயங்கிப் பொருள் கூறினர். சிலப்பதிகாரத்தில் புறஞ்சேரி யிறுத்த காதையில் 'படிந்தில *சீறடி* பரல்வெங்கானத்து' என்ற வரிக்கு உரை யெழுதிய அடியார்க்கு நல்லார் 'பருக்கை யுடையடை பாலைநெறியில் சிற்றடி படிந்தில, உள்ளடி கொப் புளித்தலிற் குஞ்சித்து நடந்தமை கூறினான்' என்று உரை கூறி யிருப்பதைக் கவனிக்க வேண்டும். சிவபெருமான் ஆடும்போது காலடியை உள்பக்கமாக வளைத்து ஆடுதலாலே 'குஞ்சித பாதம்' என்று கூறும் வழக்கு உண்டாயிற்று. குடங்கைக்கு ஏற்பக் குடாவடி என்று சிலப்பதிகாரத்திலேயே கூறப்பட் டுள்ளது.

விலங்குகளின் காலடியைக் குறிப்பாகக் கண்டு சங்கநூல் களில் வருணித்துள்ளதைக் காணலாம். மிகப் பிற்காலத்து இலக்கண நூலாகிய நம்பி யகப்பொருளில் குறிஞ்சிக்குரிய கருப்பொருள் கூறினவிடத்து 'மறப்புலி, குடாவடி, கறையடி, *சீயம்*' என்று கூறியிருப்பதைக் காணலாம். குறிஞ்சிக்குரிய விலங்குகளில் குடாவடி, கறையடி என்ற பெயர்கள் கரடியையும் யானையையும் குறித்து வருவதைக் காணலாம். சங்கப் பாடல்

களில் சிலப்பதிகாரத்திலும் திருமுருகாற்றுப் படையிலும் 'குடாவடி உளியம்' என்று வரும் கரடிப் பெயரில் 'குடாவடி' அடைமொழியாகவே வந்துள்ளது. ஆனல் நம்பியகப்பொருளில் இந்த வழக்கின் காரணமாகவே சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் 'குடாவடி' என்பதற்குப் பிள்ளைக்கரடி என்று பொருள் கூறினர் என்று தெரிகின்றது. விலங்குகளின் காலடிகளைச் சங்கப் புலவர்கள் நன்கு அறிந்தே கூறியுள்ளனர். யானையின் காலடியைப் பொங்கடி, கறையடி, பறையடி, குவவடி, பாவடி என்றெல்லாம் பொருத்தமாகச் சங்கப் பாடல்களில் கூறியுள்ளனர். யானை காலை வைத்தால் சுற்றிலும் கறைபோலச் சதை வெளியே தெரியும். ஆதலின் கறையடி என்றனர். பறைபோன்று வட்டமாகக் காணப்படுவதால் பறையடி என்றனர். யானைக்குட்டியின் காலைத் துடியடி என்றனர். காட்டுப்பூனையின் மெத்தென்ற காலடியை 'வெருக்கடி யன்ன குவிமுகிழ் இருப்பை' என்று அகநானூறு (267) கூறுகின்றது. குளம்பால் ஆன அடியைக் 'குளப்படி' என்று பிற்காலத்து நூல் ஒன்று கூறுகின்றது.

உளிபோன்ற நகம் கரடிக்கு இருப்பதால் உளியன் என்ற பெயரும் சங்கநூல்களில் கரடிக்கு வழங்கியுள்ளது. உளிபோன்ற நகத்தைக்கொண்டு கரடி கறையான் புற்றுகளைத் தோண்டும். உளியன் என்ற பெயர் சிலப்பதிகாரத்தில் நிலத்தை அகழும் கள்ளன் பெயராக வருகின்றது. 'நிலனக ழுளியன்' என்று கொலைக்களக் காதையில் கூறப்பட்டுள்ளது. உளி என்பது நிலத்தைத் தோண்டும் கன்னக்கோல் என்று தெரிகின்றது. மதுரைக்காஞ்சியிலும் 'நிலனகழ் உளியர்' என்று கூறப்பட்டுள்ளது. நீலத்தானையனகி, நிலத்தை அகழ்வதனலும் நிலத்தை அகழ்ந்து பொருள்களைத் தேடுவதாலும் கரடியைப் போன்றவனுதலால் உளியன் என்ற பெயர் கன்னம் வைக்கும் கள்ளனுக்கு வழங்கியதாகத் தெரிகின்றது. கரடி கரிய உடலை உடையது. நிலத்தை அகழ்வது. அகழ்ந்து உள்ளே உணவுப் பொருளைக் கவர்வது. இந்த ஒப்புமைகள் பொருந்துவதால் உளியன் என்ற பெயர் வந்திருக்கலாம். யாப்பருங்கல விருத்தியில் ஒரு மேற்கோள் பாடலில் "ஊகத்தி னன்மல்கு சோலை யுளிய னுயர்வரைவாய்" என்று வரும் வரியில் உளியன் என்ற பாட்டுடைத்தலைவன் பெயர் காணப்படுகின்றது. ஆதலின் கடுவன், மந்தி, ஓரி என்ற விலங்குப் பெயர்களால் சங்க காலத்தில் புலவர்களும் தலைவர்களும் அழைக்கப்பட்டதுபோலக் கரடிப் பெயரையும் பிற்காலத்தில் தரித்திருந்தனரென்று தெரிகின்றது.

இறைவிப்பித்தன் காவியம்

அல்லது

அபிராமிபட்டர் புராணம்

[ஆசிரியர் 'அடியன் மணிவாசகன்']

(முன் இதழ் ௩௫௨ஆம் பக்கத் தொடர்ச்சி)

67. வன்பொழிய வாயுறையால் வாழ்த்தும் சான்றோர்
வாழ்க்கையினைப் போற்றிடவே மக்கள் கூடி
அன்பொழுக மலர்மாலை சூட்டிச் செல்ல
அவர்கழுத்துப் போதாமற் களைந்து வைக்கும்
தன்மையினில் மதிற்பொம்மைத் தலையில் வீழ்ந்து
தவழ்ந்துசெலும் முகிற்கூட்டம் கண்டான் போற்ற
என்னிடத்தும் ஒருமாலை யுண்டே யென்பான்
ஏந்தகலம் சொரிகூடை யெடுத்துச் செல்வான்!

68. வானத்தில் ஓரழகன் நின்று வில்லை
வளைத்ததிலே பலவண்ண அம்பு பாய்ச்ச
மானத்தாள் முகக்கலசஞ் சுளித்துப் பின்னே
மார்பிடையே பொற்கலசங் கூசக் கண்ணும்
ஏனத்திற் கலைநிறையக் கோவில் மேற்பால்
எண்ணத்தை விட்டடியில் இறைவி காணக்
கானத்தில் வேட்டுவன்போல் வேட்கை மிக்குக்
கடுகிடுவான் கவலையிலான் காதல் கொண்டே.

69. வெள்ளத்தைச் சுழியோடே ஓட விட்டு
வேடிக்கை பார்க்கின்ற அன்னை பட்டன்
உள்ளத்தை யிழுத்ததிலே சிக்க வைப்பாள்
ஓடிப்போய் விழ்ந்திடுவான் புதுமை வாய்த்தான்!
கள்ளான கருங்குரங்கு திரும்பிச் சென்று
கருகித்தான் மாய்ந்ததடா! தெய்வப் பித்தில்
விள்ளாத விறுவிறுப்பில் நடப்பான் கோவில்
வியப்பான மண்டபத்தில் கண்ணை வைப்பான்.

70. பொன்மரத்தில் கொடியுயர்த்துப் பறக்கும் காட்சி,
பூரித்தே இறைவியவள் காந்தட் கைதான்
தன்னிடத்து வருகவெனும்; வந்து வாழ்வில்
தண்ணருளைப் பெறுகவெனும்; வந்தோர் தம்மை

நன்மடலில் தீட்டுதற்கு நாடி யாயும்
நந்தியுமே பொன்னடியிற் கிடக்கக் கண்டே
புன்முறுவல் வழிபாட்டிற் பரவிச் சென்னி
புரிந்துயரும் அன்பெல்லாம் அன்னை யன்பே!

(கலைகளை வியத்தல்)

71. எங்கிருந்து கொணர்ந்தாரோ கற்கள் அப்பா!
இம்மலைதான் எங்கேயோ அப்பப் பப்பா!
மங்குலிலே தோய்கலையை யெங்கே கற்ருர்?
மாக்கலைஞர் யாரேயோ ஆ! ஆ! இன்பந்
தங்குமுயர் இக்கோவில் கட்ட யார்தாம்
தனிப்பரிசும் பாராட்டும் செய்தார் கொல்லோ!
பொங்குதமிழ்க் கலையுணர்ச்சி கண்டேன் கொண்டேன்
புகழ்மணக்கும் அவர்தொண்டை முழக்கி வாழ்வேன்.

72. சிற்பியையான் கண்டிருப்பின் தழுவிக் கட்டிச்
சிந்தாத முத்தமழை யாட்டி வாழ்த்திக்
கற்பியதை யென்றனக்கும் தொழுதேன் பிச்சன்
காலமெலலாம் என்தெய்வ மேனி செய்து
பொற்பினிலே நெஞ்சுருகி யார்வேன் அன்பார்
போதெல்லாம் சூட்டியுயிர் காண்பேன் என்பேன்
சொற்கடந்த கலைத்தெய்வம் சுடரு மிங்கென்
சுவடுந்தான் பட்டிடவோ என்று நோவான்.

73. நாடுயரத் தோள்கொடுத்துத் தாங்கி நிற்கும்
நற்றலைவர் புலவோர்கள் போலும் நல்ல
வீடுயரப் பொறுத்திருந்தே அன்பு செய்யும்
வீறுடைய தாய்தந்தை போலும் யாக்கைக்
கூடுயர ஐம்புலனை நிறுத்திக் காக்கும்
கூர்நெறியோர் போலுமிந்த மண்ட பத்தைக்
கூடிநின்று தாங்குகின்ற தூணின் எண்ணம்
கூட்டியுரை சொல்லிடத்தான் கால மேது?

74. வில்லெனவே வளைத்திட்டுக் கம்பி கோத்து
விரியாணி முறுக்கிமரக் கடைச லெல்லாம்
கல்லினிலே செதுக்கியதோர் வியப்பு வைத்துக்
கவுள்யானைக் கீழ்வாய்போற் கொடுங்கை செய்து
வலலுடும்பும் முதலையுமே ஓட விட்டு
வாயிளிக்கும் குரங்கினையே நோக்க வைத்த
கல்வியினைக் கற்பான்போல் நிற்பான் ஆர்வம்
கழிமடையாய்ப் பாய்ந்துவிடும் படிமம் மேலே!

75. எப்படித்தான் நிறுத்தினரோ தூணைத் தூக்கி
எவரிரும்பாய் மாறினரோ! அனையோர் அன்பும்
அப்படித்தான் அலைகடலாய் மிதந்ததேயோ!
அபிராமி அவருரமாய் நின்ருள் கொல்லோ!
இப்படித்தான் செய்கவெனச் செய்தார் போலும்
இவரிறைவர் படைப்புத்தான் என்னே! என்னே!
துப்படியான் பல்லவர்கள் சோழர் காலத்
தூண் கலையின் வளர்ச்சியினை யோர்ந்து காண்பான்.

76. தாயையினைக் கொண்டுவந்து பார்க்கத் தூணில்
தனித்தனியே கட்டிவைத்த அழகு போலே
ஆனையின்மேல் ஆளியின்மேல் அரியின் மேலும்
ஆண்டகையின் தோள்மேலும் பொறுக்கச் செய்த
வானைநிகர் கூரையிலே கோல மிட்டும்
வடித்தநல மீன்களெலாம் துள்ள விட்டும்
தேனைவடி பூக்களெலாம் மலர விட்டும்
தெவிட்டாத மங்கைகளைப் பறிக்க வைப்பார்.

77. சிந்துகின்ற எழில்முகத்திற் சிரிப்பு மோதிச்
சீர்விழியின் சுழற்சியிலே உலகமேந்திப்
பந்துமலர்க் குழலாட விரல்கள் துள்ளப்
பறந்துநட மாடுகின்ற கால்கள் கொஞ்சச்
சிந்தனையைப் பறிக்கின்ற இடையும் நோகச்
செழிக்கின்ற இதழ்பாடப் பாவை நின்று
செந்திறத்தின் கலைவளர்க்கும் எண்ணம் பேசும்
செம்பவழப் படிமத்தை யோர்தூண் காட்டும்.

78. ஓடுகின்ற குருதியினை உகிரிற் காட்டி
ஒளிந்திருக்கும் உணர்ச்சியினை முகத்திற் காட்டி
வாடுகின்ற காதலினை வாயிற் காட்டி
வணங்குகின்ற பெற்றியெல்லாம் கையிற் காட்டித்
தேடுகின்ற செல்வமெல்லாம் நெஞ்சிற் காட்டித்
திகழ்கின்ற நரம்பெல்லாம் காலிற் காட்டி
நாடுகின்ற ஒருகுறவன் அருகில் வந்தே
நாயகியாள் நிற்பதையோர் தூண்தான் காட்டும்.

79. கொடையளித்தே கைசிவந்து கொள்கை மேவிக்
கோடாத ஆட்சியினுல் வென்றே யன்பு
மடையளித்தே மன்னுயிரை யோம்பி யென்றும்
மானத்தை யணியாகப் பூண்டு மாற்ருர்

படையளிக்கப் பாராத ஆண்மை கொண்டு
பசுந்தமிழ நாடாண்ட மன்னர் கோல
நடையளிக்கும் காதலினைக் காட்டுஞ் சிற்ப
நயமளிக்கும் தூணிங்குக் காணல் வேண்டும்.

80. ஆழிநஞ்சை யுண்டவனை யணுகி விட்டால்
ஆருயிர்தான் போயிடுமோ? ஐயா! துன்பக்
காலமதை வென்றிடலாம் மெய்யா; ஆவி
கழிந்தோடி மார்க்கண்டன் இறைவன் மேனிக்
கோலமதைக் கட்டிடுவான்; அருளின் தந்தை
கொண்டிடுவான்! எரிகின்ற இலைவேல் ஏந்திக்
காலனையோர் காலாலே யழிக்கும் மாட்சி
காலமெலாம் கண்டிடலாம் தூணில் ஓர்பால்.

81. கண்களிலே குருதியுகக் கண்டே வோடிக்
கதறியங்குக் காளத்தி யப்பன் கட்டிக்
கண்களினால் நீராட்டிக் கலந்து பேசிக்
கண்ணுக்குக் கண்ணேதான் மருந்தாய்ச் செய்து
கண்ணினையே நுங்கைப்போல் தோண்டி யப்பிக்
கண்ணறுவை மருத்துவத்தில் முதலோன் ஆன
கண்ணப்பன் அன்பினுக்கும் உவமை யுண்டோ?
கலையிதற்கும் ஒப்பில்லை யென்னும் தூணே!

82. துள்ளிவரும் பிறவிகளின் துயரைப் போக்கித்
துணையிருந்தே அருளூட்டி யன்பை மூட்டி
அள்ளியெடுத் துக்கொஞ்ச இருகை போதா
அருந்தடக்கை யெட்டுத்தான் வேண்டு மென்றே
உள்ளியவள் படைத்ததொடு படைகள் ஏந்தி
உலகத்தில் தீமைகளை யழிப்பாள் தேவிக்
கள்ளியவள் கமழடியிற் கிடப்பான் மேனி
கண்சிவப்பக் கண்டயர்வான் அன்பும் என்னே!

83. உலகத்தில் எங்குமிலாக் கலையாய்க் கண்ணும்
உயர்தமிழ மன்றமதில் ஆடுங் கூத்தன்
ஒலியுடுக்கும் தீமலையும் கையி லேந்தி
உயிர்தோற்றி யழிக்கின்ற வுண்மை சொல்லிக்
கலிகிடத்தி மிதிப்பதுவும் தூக்கிக் காட்டும்
காலதனால் பகுத்தறிவை வணங்க வைத்தும்
உளிக்குமொரு அருளீவான் படிம மாகி
ஒருகல்லில் வந்தாடும் இன்பம் என்னே!

———

(தொடரும்)

பொது நூலக இயக்குநர் கன்னிமரா நூலகக் கட்டிடத்தில் 23-6-75 இல் நடத்திய 1974 இல் வெளியிடப்பெற்ற நூல்களின் அறிமுக விழாவிலே கழகநூல்கள் இடம் பெருமைக்குரிய விளக்கம்

மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் ''திருவள்ளுவர் விழா நாளன்று'' தமிழகத்திலே அதன் முந்திய ஆண்டில் வெளியிடப் பெற்ற நூல்களை அறிமுகஞ் செய்தல் வேண்டுமென்ற நல்ல திட்டத்தைப்பற்றி 14-11 74இல் இராசாசி மண்டபத்திலே நடைபெற்ற குழந்தைகள் நாள் விழாவிலே தெரிவித்து, அத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பினைப் பொது நூலக இயக்குநர் ஏற்று நடத்த வேண்டுமென்று கூறினார்கள்.

அதையொட்டிப் பொதுநூலக இயக்குநர் அனுப்பிய 14-12-74 நாளிட்ட ந. க. எண் 12513/கியூ/74 கடிதம் 19-12-74 இல் கழகத்திலே கிடைக்கப்பெற்றது. அதன்கண் குறிப்பிடப்பெற்ற செய்தி வருமாறு :

''1974 ஆம் ஆண்டில் தங்கள் நிறுவனத்தின்மூலம் வெளியான நூல்பட்டி ஒன்றை நூலாசிரியர்களின் விலாசத்தோடு இவ்வியக்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு பதிப்பாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்''

அதற்குக் கழகம் 30-12-1974 இல் பத்து நூல்கட்குரிய பட்டி ஒன்றை மட்டும் அவற்றை எழுதிய ஆசிரியர்களின் முகவரிகளுடன் அனுப்பி வைத்தது.

அடுத்து 21-12-74 நாளிட்ட ந. க. எண் 12738/கியூ/74 கடிதம் 4 1 1975 இல் கிடைக்கப் பெற்றது. அதன்கண் குறிக்கப் பெற்ற செய்தி வருமாறு.

1. 1974ஆம் ஆண்டு பதிப்பாகிய நூல்கள் பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தும் பொருட்டு 1975 அம் ஆண்டு சனவரித் திங்கள் 15ஆம் நாள் நடைபெற இருக்கும் ''நூல்கள் அறிமுக விழாவில்'' பங்கேற்று விழா சிறப்பிக்க வேண்டுகிறேன்.

2. இணைப்பில் கோரப்பட்ட விபரங்களைப் பூர்த்தி செய்து இவ்வியக்கத்திற்கு மறு தபாலில் அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன்''

அக்கடிதத்துடன் வரப்பெற்ற அச்சான அறிக்கையில் 4, 5 ஆம் பத்திகள் அடியிற் கண்டவாறு :

4. நூல்கள் அறிமுக விழாவில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நூலாசிரியர்கள் தங்களின் நூலின் ஒரு படியை அளிக்கவும், மற்றொரு படியை நூல் காட்சியில் இடம்பெறச் செய்யவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

5. எனவே 1975 சனவரியில் நடக்கவிருக்கும் நூல்கள் அறிமுக விழா சிறப்பான முறையில் நடந்தேற நூல் ஆசிரியர்களும் பதிப்பாளர்களும் 1974 இல் வெளியான நூல்களைப் பற்றி இணைப்பில் கண்ட படிவத்தில் நூல் விபரங்களை இரண்டு படிகளில் நிரப்பி நூலின் இரண்டு படிகளுடன் 1975 சனவரி 5 ஆம் நாளுக்குள் பொது நூலக இயக்குநருக்குக் கிடைக்கும்படி அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

14-12-74 இல் அனுப்பப் பெற்ற கடிதம் பதிப்பாளர்கட்கு மட்டுமே அனுப்பப் பெற்றுள்ளது. 21-12-74 நாளிட்ட கடிதம் பதிப்பாளர்கட்கும் நூலாசிரியர்கட்கும் தனித்தனியே அனுப்பப் பெற்றுள்ளது.

21-12-74 நாளிட்ட 12738/கியூ/74 கடிதத்திற்குக் கழகம் 4-1-75 இல் எழுதியது வருமாறு :

தங்கள் 21-12-74 நாளிட்ட கடிதம் இன்று மாலைதான் கிடைக்கப்பெற்றோம்.

அறிமுக விழா நடத்துவது தெரிந்து மகிழ்ச்சி. நாங்கள் 1974 இல் வெளியிட்டுள்ள புத்தகங்களில் 2 படிகள் விதம் அனுப்பும்படி எழுதியுள்ளீர்கள். விழா முடிந்தபின்னர் புத்தகங்கள் திருப்பி அனுப்பப்படுமா என்ற விபரம் அறிக்கையில் இல்லை. அதற்குத் தங்கள் பதிலை எதிர் பார்க்கிறோம்.

(ஒ-ம்) வ. சுப்பையா

கழக ஆட்சியாளர்

அதற்கு 19-6-75 வரை மறுமொழியொன்றும் வரவில்லை. உள்ளபடியே 23-6-75 இல் அறிமுகவிழா நடைபெறும் என்ற செய்தியும் அதுவரை எனக்குத் தெரியாது.

17-6-1975 இல் 'பொது நூலகத்துறை நூல்கள் அறிமுக விழா' என்ற தலைப்பில்

23-6-1975 திங்கட்கிழமை மாலை 5-00 மணிக்கு நடக்க இருக்கும் நூல்கள் அறிமுக விழா 1974 அழைப்பிதழ் இணைத்திருக்கிறோம்.

2. விழாவில் நூலாசிரியர்கள் அறிமுகம் நடத்த இருக்கிறது. அவர்களுக்கு அகரவரிசை இருக்கைகள் ஒதுக்க வேண்டியிருக்கிறது.

எனவே தங்கள் சொந்தச் செலவில் பங்கேற்கும் நூலாசிரியர்கள்/பதிப்பாளர்கள் தாங்கள் கலந்து கொள்வதுபற்றி உடனடியாகத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

3. விழாவில் பங்கேற்கும் நூலாசிரியர்கள்/பதிப்பாளர்கள். மாலை 4-30 மணி அளவில் வந்து தங்களது இருக்கைகளில் அமருமாறு வேண்டுகிறோம்.

(ஒ-ம்) வே. தில்லைநாயகம்
பொது நூலக இயக்குநர்.

அறிமுக விழா அறிக்கை அட்டை 10 6-1975 இல் அச்சிடப் பெற்றுள்ளது. அழைப்புக் கிடைக்கப்பெற்ற 19.6-75 லேயே கழகம் எழுதிய கடிதம் வருமாறு.

1974-ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற நூல்கள் ஒவ்வொன்றும் இருபடிகள் விழக்காடு அனுப்பி வைக்குமாறு தாங்கள் 21-12-74 இல் எழுதிக் கேட்டதற்கு 4-1-75 அன்று ஒரு கடித வாயிலாக "விழா முடிந்த பின்னர் புத்தகங்கள் பதிப்பாளர்க்குத் திருப்பி அனுப்பப்படுமா" என்று கேட்டிருந்தோம். அக் கடிதத்திற்கு இந்நாள் வரை மறுமொழியில்லை.

ஆனால் 23-6-75 (திங்கள்) மாலை 5 மணி அளவில் அறிமுக விழா நடைபெற விருப்பதாகக் கழக அன்பர் ஒருவர் எழுதிய கடித மூலம் அறிந்தோம். எனவே, தங்களிடமிருந்து இனி மறுமொழி வரும் என்ற நம்பிக்கையில்லாமையாலும் விழாவில் கழகம் பங்கு பெறவேண்டுமென்ற விருப்பம் உள்ளமையாலும் இத்துடன் 17 நூல்களில் இருபடிகள் விழக்காடு அனுப்பியுள்ளோம். அன்புகூர்ந்து அவற்றை ஏற்று ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

போதிய காலமின்மையால் கேட்கப்பட்டிருக்கும் குறிப்புக்கள் அனைத்தையும் அனுப்ப இயலவில்லை. 1. நூற்பெயர், 2. ஆசிரியர் பெயர், 3. அளவு, 4. பக்க எண், 5. விலை போன்ற குறிப்புக்களை இணைத்துள்ளோம்.

சட்டப்படி கன்னிமரா நூலகத்திற்கும் பிற தேசிய நூலகங்களுக்கும் தமிழ்நாடு நூல் பதிவாளருக்கும் படிகள் அவ்வப்பொழுது அனுப்பப்பட்டு வருகின்றனவென்று தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் "பள்ளி விவரங்களுக்காக மட்டும்" என்ற தலைப்பில் தனியாருக்கு விற்றவை. கல்வி நிலையங்களுக்கு விற்றவை, இலவசம், கையிருப்பு. அனைத்துரிமையும் விற்றுப் பெற்ற மொத்தத் தொகை அல்லது பதிப்பு உரிமை விழுக்காடு, விழக்காடு முறையில் பெற்ற தொகை போன்ற குறிப்புகள் காணப்படுகின்றன. இவை "அறிமுக விழா" விற்கு எந்த வகையிலும் தேவையில்லாத குறிப்புக்களென்று கருதுகிறோம்.

மேலும் பதிப்பாளர்கள் இக் குறிப்புகளைத் தெரிவிப்பது உகந்ததல்ல என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப் புத்தகங்களை எக்காரணத்தைக் கொண்டாவது ஏற்றுக் கொள்ள விருப்பமில்லையெனின் அவற்றை நாங்கள் திரும்ப எடுத்துக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறோம் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

(ஒ-ம்) வ. சுப்பையா
கழக ஆட்சியாளர்

இக் கடிதம் கிடைக்கப் பெற்றவுடன் பொது நூலக இயக்குநரிடமிருந்து வந்த மறுமொழி வருமாறு :

ந. க. எண் 12513/ஆர்/74 நாள் 20-6-75

பொருள் : பொது நூலகத்துறை நூல்கள் அறிமுகவிழா 1975 சம்பந்தமாக :

பார்வை : 1. தங்கள் கடித நாள் 4-1-1975

2. இவ்வலுவலகக் கடித எண் 12513/ஆர்/74 நாள் 17-1-75

3. தங்கள் கடித நாள் 19-6-75 காலம் கடந்து அலுவலகம் வந்த தங்கள் நூல்களை விழாவில் அறிமுகம் செய்ய இயலாமைக்கு வருந்துகிறோம்.

(ஒ-ம்) வே. தில்லைநாயகம்
பொது நூலக இயக்குநர்

இக் கடிதத்தில் பார்வை 2 இல் குறிப்பிட்ட கடித எண் 12513/ஆர்/74 நாள் 17-1-1975 எங்கட்குக் கிடைக்கப் பெறவே இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

எனவே 24-6-75 இல் கழகம் எழுதிய கடிதம் வருமாறு :

17-1-75 நாளன்று ஒரு கடிதம் எங்கட்கு எழுதியனுப்பியுள்ளதாகப் பார்வையில் இரண்டாவதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அக்கடிதம் இந்நாள்வரை வரவில்லை என்று தெரிவிக்க விரும்புகிறோம். அக் கடிதம் அஞ்சலில் அனுப்பப்பட்டதா அல்லது நேரிடையாகச் சேர்ப்பிக்கப்பட்டதாவென்ற விபரம் அறிய விரும்புகிறோம், தாங்கள் 17-1-75ல் எழுதிய கடிதத்திற்கு ஒரு படி எடுத்து எங்களுடைய கோப்பில் வைப்பதற்கு அனுப்பும்படி வேண்டுகிறோம். இத் தகவலைச் சாதாரணமாகக் கருதி மறுமொழி எழுதாமல் புறக்கணிக்கமாட்டீர்களென்று நம்புகிறோம்.

தங்கள் கடிதம் வராத காரணத்தினால் இவ்வாண்டு நடைபெறும் "அறிமுக விழா"வில் கழகம் வெளியிட்ட நூல்கள் இடம் பெறவில்லை. இதனைப் பொதுமக்கள் பெருங்குறையாகக் கருதுவார்கள். மேலும் நாட்டுக்கு ஓரிழப்பு என்பதிலும் ஐயமில்லை.

தங்கள் மறுமொழி கிடைத்ததும் நாங்கள் அனுப்பிவைத்த 17 நூல்களையும் திரும்பப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்கிறோம்.

இக் கடிதத்திற்கு மறுமொழி வரவில்லை. எனவே 24-7-75ல் கழகம் எழுதிய கடிதத்திற் குறிப்பிட்டபடி 30-7-75ல் கழகப் பணியாளனை அனுப்பி அறிமுக விழாவுக்கு அனுப்பிய கழக நூல்கள் அனைத்தையும் திரும்பப் பெற்றுக்கொண்டோம்.

மேலே கண்ட 1974 நூல்கள் அறிமுக விழாவினால் அறிஞர் பெருமக்கட்கு யான் கடமையுணர்வோடு தெரிவிக்க வேண்டிய குறிப்புகள் :

1. மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கருதியபடி 1975 சனவரி 16 "திருவள்ளுவர் திருநாளன்று" அறிமுக விழா நடைபெறவில்லை.

2. 1974ல் வெளியிட்ட நூல்களைப் பதிப்பாளர்கள் கன்னிமரா நூலகத்துக்கும் புத்தகப் பதிவாளர்களுக்கும் அனுப்பி வருகின்றமையால் அறிமுக விழாவுக்குத் தாள் விலை, அச்சுக்கூலி, கட்டடக்கூலி மற்றுஞ் செலவுகள் மிகவும் கூடியுள்ள இக்காலத்தில் இரண்டிரண்டு படிகளை விலையின்றி அனுப்புவதுபற்றிக் கருதுவது முக்கியமானது.

3. போக்குவரத்துக்குச் செலவு மிகுதியும் தொல்லையு முள்ள இக்காலத்தில் பதிப்பாளர்களும் நூலாசிரியர்களும் அவரவர்கள் சொந்தச் செலவில் வருதல் வேண்டுமென்பது.

4. எங்கள் 19-6-75 கடிதத்தில் குறிப்பிட்டவாறு அறிமுகஞ் செய்யப்பெறும் நூல்கட்கு 1. நூலின் பெயர், 2. ஆசிரியர் பெயர், 3. நூலின் அளவு, 4. பக்க எண் 5. விலை ஆகியவை மட்டும் கேட்கவேண்டியதிருக்க வீணே. இணைப்பில் 2 பக்க அளவில் பல தலைப்புகளில் விளக்கம் கேட்டிருப்பது முற்றிலும் உகந்ததன்று.

5. நூல்களை அனுப்ப வேண்டியது பதிப்பாளர்களா? அல்லது நூலாசிரியர்களா என்பது திட்டவட்டமாகக் கடிதத்திலே குறிப்பிடாதது.

6. இணைப்பில் கண்ட குறிப்புகளை எழுத வேண்டியது பதிப்பாளர்களா அல்லது நூலாசிரியர்களா என்பதும் திட்டவட்டமாகக் குறிப்பிடாதது.

7. இணைப்பின் இறுதியில் மேற்கண்ட விவரங்களனைத்தும் உண்மையானவையென்று உறுதிகூறுகின்றேன் என்று கையொப்பம் இடவேண்டிய இடத்தில் 'ஆக்கியோர் கையொப்பம்" என்று இருப்பதால் நூலாசிரியர்தாம் கையெழுத்திட வேண்டியிருப்பதாகவுள்ளது. அப்படி ஆக்கியோர் கையெழுத்

திட வேண்டுமாயின் அவரே கேட்கப்பெற்ற குறிப்புகளை யெல்லாம் எழுத முடியாமையாகும். இங்ஙனம் இணைப்பில் பொது நூலக இயக்குநர் குழறுபடைகட்கு இடம் வைத்துள்ளனர் என்பது தெளிவு.

8. மற்றும் ஒரு குழறுபடை: அறிமுக விழா அழைப்பிதழுடன் வந்த இணைப்பில் எண் 2ல் "விழாவில் நூலாசிரியர்கள் அறிமுகம் நடத்த இருக்கிறது. அவர்களுக்கு அகர வரிசையில் இருவகைகள் ஒதுக்க வேண்டியிருக்கிறது" என்று குறிக்கப் பட்டுள்ளது. அதன்கண் பதிப்பாளர்கள் அறிமுகம் நடத்த இருப்பதாகவோ அவர்களுக்கு அகர வரிசையில் இருக்கைகள் ஒதுக்குவது பற்றியோ குறிப்பிடப் பெறவில்லை. ஆனால் எண் 3 இல் "விழாவில் பங்கேற்கும் நூலாசிரியர்கள் பதிப்பாளர்கள் மாலை 4 30 மணி அளவில் வந்து தங்களது இருக்கைகளில் அமருமாறு வேண்டுகிறோம்.

சிறந்த நூல்கட்கு அரசு பரிசு வழங்கும் விழாவிலும்; குழந்தைகள் நூல் விழாவிலும் நூலாசிரியர்களும் பதிப்பாளர்களும் அறிமுகஞ் செய்து வைக்கப்பெறுகின்றனர்.

ஓராண்டில் பல துறைகளில் ஏராளமான நூல்கள் வெளிவருகின்றமையால் நூற்காட்சியமைப்பு விழா மட்டும் நடத்துவதும் நூல்களைப்பற்றிய செய்தி மலர் வெளியிடுவதுமே பொருத்தமாகும் என்று கருதுகின்றேன். எனது கருத்து ஏற்புடைத்தாயின் அரசு ஏற்று அதன்படி பின் ஆண்டுகளில் நடைபெறச் செய்தல் நன்றாகும்.

இணைப்பில் கேட்டபடி எந்தப் பதிப்பாளரும் குறிப்புகளை அனுப்பியிருக்க மாட்டார்கள். பொது நூலகத்துறை வெளியிட்ட சிறப்பு மலரிலும் எங்கள் கடிதத்தில் கண்ட குறிப்புகள் மட்டுமே காணப்பெறுகின்றன.

எங்கள் கழக நூல்கள் 17ல் கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம் இயற்றிய 'அம்புலிப் பாட்டுப் பாடாதே', என்ற நூல் மட்டும் ஆசிரியர்க்கு அளிக்கப்பெற்ற படிகளிலிருந்து கொடுக்கப் பெற்ற மலரிற் காணப்பெறுவது இதனைப் படிப்பவர்கட்கு வியப்பினைத் தரும். அவர் இணைப்பில் கேட்டப்பட்ட குறிப்புகட்குச் சரியானபடி விடை எழுதியிருக்க மாட்டார்கள்.

இந்த மலரினால் 1974ல் தமிழிலே 370 நூல்கள் மட்டுமே வெளிவந்திருக்கின்றன என்பதும் அவற்றில் ருசியப் புதினம் ஒன்றுடன் 110 புதினங்கள் வெளிவந்திருக்கின்றன என்பதும் ஆங்கிலத்திலும் 55 நூல்களே வெளிவந்துள்ளன என்பதும்

உற்றுநோக்குவார்க்குத் தமிழர்கள் நூல் வெளியீட்டுத்துறையில் எவ்வளவு பின்தங்கி இருக்கின்றனர் என்பதைக் காட்டும்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் வழங்கிய அணிந்துரையில் பொது நூலகத்துறை இயக்குநர் திரு. தில்லைநாயகம் அவருக்குத் துணையாக இருப்பவர்கள் அனைவர்க்கும் பாராட்டுதல் தெரிவிக்கப் பெற்றிருப்பதாலும் விழா நிகழ்ச்சி நிரலில் கண்டபடி 'தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம் நடத்திய நூலகப் படிப்புக் கட்டுரைப் போட்டி மாநிலப் பரிசளிப்பு' என்ற தலைப்பையொட்டி அச் சங்கச் செயலர் திரு. பொன்னையா முதலியார் பேசியதைக் கொண்டும் நூலக இயக்குநர் திரு வே. தில்லைநாயகம் அவர்களும் திரு. பொன்னையா முதலியாரும் சேர்ந்தே அறிமுக விழாவை நடத்தியுள்ளனர் என்பது தெளிவு.

இங்ஙனம் இவ்விருவரும் கூடி நடத்தும் அறிமுக விழாவிலே கழகம் எங்ஙனம் நன்மைபெற முடியும் என்பதை இதனைப் படிக்கும் அறிஞர்கள் முன் பரலில் வெளிந்த கழக நூல்களை வாங்காமல் தட்டிக் கழித்த செய்தி பற்றிய கட்டுரையைக் கொண்டு தாமே உணர்ந்து கொள்வார்கள்.

அறிமுக விழாவுக்குச் சென்றிருந்த என் நண்பர்கள் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேச்சைக் கேட்டு "அமைச்சரவர்கள் மனநிறைவோடு பேசவில்லை" என்று சொன்னார்கள். அதனை உள்ளபடி நாம் நம்ப வேண்டியது தானே.

"உம்முடைய நேரம் பொன்னானது; நீர் ஏன் வருதல் வேண்டும்? உம்முடைய வகையாளை அனுப்பலாமே" என்று சொல்லும் என் பெருமதிப்புக்குரிய அறிஞர் பெருமக்கள் சிலர் "ஏன் வீணே இதைப்போன்ற செய்திகளை விரித்து எழுதி வருகிறீர்கள்?" என்று கேட்கின்றனர். யான் அதனை உணராமலில்லை. கழகநூல் வெளியீட்டிற்கு அத் துறை வளர்வதற்கு உதவி செய்யவேண்டிய அதிகாரிகள் இப்படியே தொடர்ந்து விளைவிக்கும் கேடுகளை யான் விளக்கி எழுதுவதால் தமிழ் மொழிக்கும் இனத்துக்கும் நாட்டுக்கும் நன்மை ஏற்படும் என்ற ஒரே நோக்கம் பற்றியேதான். ஆதலால் என்மீது பொறுமை காட்டும்படி அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

வ. சு.

மறைமலையடிகள் நூல் நிலையத்திற்குப் பிரெஞ்சு நாட்டு நூலகர் பாராட்டு

பாரிசு மாநகரிலுள்ள பிரான்சுக் கல்லூரியின் நூலகர் திரு. ஜி. டுவர்டியர் (G. Douverdier) அண்மையில் சென்னை, மறைமலையடிகள் நூல் நிலையத்திற்கு வந்திருந்தார். 'தமிழில் முதலில் அச்சான நூல்கள்' என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொண்டுள்ள இவர் கடந்த ஒரு மாத காலமாக கல்கத்தா, டில்லி, சென்னை முதலியவற்றிலுள்ள நூலகங்களைப் பார்வையிட்டு வருகிறார். அவர் தம் ஆய்வின் தொடர்பாக மறைமலையடிகள் நூல் நிலையத்திலுள்ள அரிய நூல்களைப் பார்வையிட்டு அவற்றிலிருந்து தம் ஆய்வுக்கு வேண்டிய குறிப்புகளை எடுத்துக் கொண்டார். அவர் நூலகத்தின் 'பார்வையாளர் ஏட்டில் கீழ்வருமாறு எழுதியுள்ளார் :

'இந்த நூலகத்தைப் பார்வையிட்டு நான் பெருமகிழ்வெய்தினேன். ஐரோப்பாவிலும் பிற மேலைநாடுகளிலும் கிடைக்காத பல அரிய நூல்களை நான் இங்கே கண்டேன். எல்லா அரிய நூல்களும் இந்த நூலகத்தில் ஓரிடத்தில் காண்பது தமிழ் ஆய்வில் ஈடுபாடு கொண்டுள்ள ஒவ்வொருவருக்கும் பெரிய கண்டுபிடிப்பாகும். இவ்வரிய நூல்கள் ஒழுங்காகப் பாதுகாக்கப் பெற்று ஆய்வாளர்கட்குப் பயன்படும் வகையில் அமைந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இந்தியாவிலுள்ள வடநாட்டு மொழிகளிலுள்ள அரிய நூல்கள் செரம்பூர் நூலகத்தில் உள்ளதுபோல் தமிழ் நூல்கள் அனைத்தும் இந் நூலகத்தில் ஒருசேரக் காணக் கிடைப்பதால் என்னைப் பொறுத்தவரை இதனைத் 'தமிழ் செரம்பூர் என்று கூறுவேன். நான் பார்வையிட்ட இந்திய நூலகங்கள் எல்லாவற்றிலும் இது சிறந்த நூலகமாகும்.

திரு. டுவர்டியர் தம் பாராட்டுரையைப் பிரெஞ்சுமொழியில் வடித்துள்ளார். அதன் ஆங்கில மொழி பெயர்ப்பை அவரே செய்து கொடுத்தவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

I have great pleasure in visiting this library. I here found books which are not available in Europe and other Western Countries. For everyone interested in Tamil Studies to see all the rare books in one place i. e. in this library is really a discovery. It is also happy to see these rare volumes are well preserved and made available for the research scholars. For me this is "Tamil Serampur" like for all the other North Indian languages Serampur library is famous. This is really a very great library of all the Indian libraries I have seen.

G. DOUVERDIER
Librarian,
College de France. Paris.

பிற்பட்ட நலத்துறை அமைச்சர்
என். வி. நடராசன் அவர்கள் மறைவு

திரு நடராசனார் தமக் கேற்பட்ட ஈரல் கோளாறினால் சென்னைப் பொது மருத்துவமனையில் தங்கி 19-6-75 முதல் சீரிய முறையில் மருத்துவஞ் செய்யப் பெற்றார். 2-8-75 இரவு 2-45 மணிக்குத் தமது பருவுடலை நீத்து நுண்ணுடலில் விண்ணுலகெய்தியது தமிழ் மக்கட்குப் பேரதிர்ச்சியைத் தருவதாயிற்று.



1937இல் ஏற்பட்ட இந்தி எதிர்ப்பியக்கத்தில் ஈடுபட்டு அது கட்டாயப் பாடமாகப் புகுத்தப்பட்டதைத் தடுத்து நிறுத்தியதில் பெரும் பங்கு கொண்டவர். செல்வி சிலம்பு 49 பரல் 2இல் இந்தி எதிர்ப்பியக்கக் கட்டுரையில் அவரும் அவர்தம் நெருங்கிய நண்பர் திரு. முருகேசனாரும் செய்துள்ள தொண்டுகளைக் காண்க.

இந்தி எதிர்ப்பியக்கமே அவர் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையில் இடம் பெற்றுப் புகழ் சிறக்க வாய்ப்பளித்தது. தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூறியபடி அவர் கொள்கையில் உறுதி படைத்தவர். கட்டுப்பாட்டிலிருந்து ஒரு சிறிதும் விலகி நடக்காதவர். எளிய வாழ்க்கையில் இனிய பண்போடு மக்களிடம் நன்கு பழகுபவர். அவரது பிரிவு சிறப்பாக முன்னேற்றக் கழகத்துக்கும் பொதுவாகத் தமிழ் மக்கட்கும் பேரிழப்பாகும்.

அரசியல் நிலையில் அவரோடு கழக ஆட்சியாளர் நெருங்கிப் பழக இயலாதிருப்பினும்,

> "முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
> அகநக நட்பது நட்பு"

என்ற திருவள்ளுவர் பொய்யா மொழிக்கு இலக்கணமாக இருந்து வந்தனர். இந்தி எதிர்ப்பியக்கம்பற்றி அவர் பேச நேரும்போதெல்லாம் ஆட்சியாளரையும் அவர்தம் அருமைத் தமையனார் திருவரங்கனாரையும் குறிப்பிடாமல் இருக்கமாட்டார். மறைந்த பெருமகனாரின் மனைவியார்க்கும் மக்களுக்கும் கழகச் சார்பில் ஆட்சியாளர் தமதிரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

நடராச! நமன்நுந்தன் உயிர்வேட் டானே!
(பேராசிரியர் கோ. வே. பெருமாள், எம். ஏ., பி. டி.)

பிற்பட்டோர் நலம்பேணப் பிறந்து வந்தீர்;
பெருமைப்பின் இலக்கணமாய்ப் பிறங்கி வாழ்ந்தீர்;
முற்பட்ட திட்டங்களைத் தீட்டி விட்டீர்;
முதுதமிழர் பண்பாட்டைக் கூட்டி விட்டீர்;
சொற்செட்டுக் கழகம்வளர் அமைச்சர் ஆனீர்;
சோர்வுற்றோர் துயர் துடைக்கும் தொண்டர் ஆனீர்;
நற்பட்டம் உற்றவுந்தன் நலங்கேட் டானோ?
நடராச! நமன்உந்தன் உயிர்வேட் டானே!

செய்திகளும் குறிப்புகளும்

இராசாசி மண்டபத்தில் எழுச்சி யூட்டும் வண்ணப்படங்கள்

சென்னை இராசாசி மண்டபத்தில் வலப்புறம் இடப்புறச் சுவர்களில் நிறுத்தப் பட்டிருந்த ஆங்கிலேயர் ஆட்சியில் ஆளுநர்களாயிருந்தோர் படங்களை நீக்கிவிட்டு வலப்புறச் சுவரில் பெரியார், திருவள்ளுவர், பாண்டியன் நெடுஞ்செழியன், பாரதியார், சேரன் செங்குட்டுவன், கம்பர் ஆகியோரின் வண்ணப் படங்களும் இடப்புறச் சுவரில் பாரதிதாசன், ஔவையார், கரிகாற் சோழன், வ. உ. சிதம்பரனார், வீரபாண்டியக் கட்டபொம்மன், இளங்கோவடிகள் ஆகியோர் வண்ணப் படங்களும் எதிர்எதிராக முறையே 27-6-1975 இல் நிறுத்தப் பெற்றன. தமிழகவரசு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமது ஆட்சியில் இது காறும் செய்துள்ள சீரிய செயல்களில் இஃதொன்றாகும். பாராட்டுவோம்; வாழ்த்துவோம்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் புதிய துணைவேந்தர்

சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பொறுப்பை திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களுக்குப் பின் டாக்டர் மால்கம் ஆதிசேசையா அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.



டாக்டர் ஆதிசேசையா அவர்கள் கல்வித் துறையில் நீண்ட காலம் உழைத்தவர். சென்னைக் கிருத்தவக் கல்லூரியில் பொருளியல் பேராசிரியராகப் பணியாற்றி வந்தபோது யுனெஸ்கோவில் பணியாற்றச் சென்றார். அதன்உதவிப் பொது இயக்குநராக எட்டு ஆண்டுகள் அரும்பணியாற்றி ஓய்வு பெற்றார்.

கேம்ப்ரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் முதன் முதலாக 'டாக்டர்' பட்டம் பெற்ற இவருக்கு உலகிலுள்ள பதினைந்து பல்வேறு பல்கலைக் கழகங்கள் சிறப்பு 'டாக்டர்' பட்டம் வழங்கியுள்ளன.

சென்னை திரும்பிய பின் 'சென்னை வளர்ச்சித்துறை ஆய்வு நிறுவனம்' ஒன்றைத் தொடங்கி அதன்வழி நாட்டு வளர்ச்சிக்குதவும் நல்ல பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

அவர்தம் ஆட்சிக் காலத்தில் சென்னைப் பல்கலைக் கழகம் உலகத்தில் சிறந்த இடத்தைப் பெறும் என்று எதிர்பார்ப்போமாக.

அறிஞர் நாரண துரைக்கண்ணன் அவர்களின் முத்துவிழா

முதுபெரும் எழுத்தாளரான அறிஞர் கலைமாமணி நாரண துரைக்கண்ணன் அவர்களின் 70 ஆவது பிறந்த நாள் விழா முத்து விழாவாக இவ் ஆகஸ்டுத் திங்களில் சிறப்பாகக் கொண்டாடப் பெறும். இதனைச் சீரும் சிறப்புமாக் கொண்டாடுதற்கு 'அஞ்சுகம்' இதழாசிரியர், தமிழ்

சுடர் திரு. மீ. சு. இளமுருகு பொற்செல்வி அவர்கள் தலைமையில் 'முத்து விழாக்குழு' ஒன்று அமைக்கப் பெற்றுள்ளது.

விழாவில் திரு நாரண துரைக் கண்ணன் அவர்கட்குத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைக் கொண்டு பொன்னுடை யணிவித்துப் 'பொற்கிழி' வழங்க விழாக்குழுவினர் திட்டமிட் டுள்ளனர்.

திரு 'ஜீவா' என்ற புனை பெயரையுடைய விழாத் தலைவர் அவர்கள் ஐம்பது ஆண்டுகட்கு மேலாக எழுத்துத் துறையில் ஈடுபட்டுள்ளவர். மறைத்திரு. மறைமலையடிகளாரின் மாணக்கராய இவர் தம் ஆசானின் பெருமையை எங்கும் எடுத்துக் கூறி வருபவர். 'பிரசண்ட விகடன்' 'ஆனந்த போகினி' இதழ்கள் வாயிலாக இவர் ஆற்றிய தமிழ்த் தொண்டு என்றும் மறக்க முடியாதது.

பிரதாப முதலியார் சரித்திரம் பரிதாப முதலியார் சரித்திர மாகக் கல்கியிற் கண்டது

அருட்செல்வர் வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரத்தைக் காலத்திற்கேற்பக் கழகம் தனித் தமிழாக்கி வெளியிட்டு வருவதைக் கண்டு அத்தனித் தமிழ்க் கொள்கை பிடிக்காமல் அதனைப் 'பரிதாப சரித்திரம்' என்று தலைப்பிட்டுக் கண்டித்துள்ளதைக் 'கல்கி'யிற் கண்டேன். மறைமலையடிகளாரும் பண்டிதமணியவர்களும் கழகத் தின் தனித்தமிழ்க் கொள்கைக்கு எடுத்துக்காட்டாக உள்ளனர் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அருட்செல்வர் இப்போது இருப்பார்களாயின் அவர்களே தம் நூல்களைத் தனித் தமிழாக்கி வெளி யிடுவார்களென்பதில் ஐயுறுதற்கில்லை. 'ஆகாஷ்வாணி' 'சென்னை இராச்சியம்' ஆகியவை 'வானொலி' 'தமிழ்நாடு' என்று மாற்றப் பெற்ற போது சிலர் பிதற்றியதை மக்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

குழந்தைகள் கலைக் களஞ்சியம் 9ஆம் தொகுதி வெளியீட்டு விழா

தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் உருவாக்கி வெளியிட்டு வரும் 'குழந்தைகள் கலைக்களஞ்சியத்தின் 9 ஆம் தொகுதி வெளியீட்டு விழா மயிலை சீனிவாச சாத்திரியார் மண்டபத்தில் திரு. சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் தலைமையில் 20-7-75 அன்று நடைபெற்றது.

குழந்தைக் கலைக் களஞ்சியத்தின் இறுதிப் பகுதியான தொகுதி சில திங்களில் வெளிவருமென்றும் அதை அடுத்துப் பெரிய கலைக் களஞ் சியத்தின் 10 தொகுதிகளை மீண்டும் புதுப்பித்துப் பதிக்கும் பணி தொடங்குமென்றும் மதிப்புமிகு அவினாசிலிங்கம் அவர்கள் குறிப் பிட்டார்கள்.

9ஆம் தொகுதியைச் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தாமரைத்திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் பாராட்டி வெளி யிட்டார். அதன் சிறப்பு நலன்களைத் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் எடுத்துக் கூறினர்.

பதிப்பாசிரியர் திரு பெ. தூரன் அவர்கள் நன்றி கூறினர்.

'கபிலரகவல்' ஆங்கில நூல் வெளியீட்டு விழா

பழம் புலவரான 'கபிலர்' என்பாரியற்றிய 'கபிலர் அகவல்' என்னும் நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா மயிலை சாந்தி அமைதி நிலையத்தில் 26-7-75 அன்று நடைபெற்றது. பல

ஆராய்ச்சி நூல்களின் ஆசிரியரான திரு. ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் மொழி பெயர்த்தது இந் நூல்.

விழாவிற்குத் திரு. கே. ஆர். சீனிவாச ஐயங்கார் தலைமை தாங்க முன்னாள் நீதிபதி திரு. எஸ். மகராஜன் அவர்கள் நூலைப் பாராட்டி வெளியிட்டார்கள். 'சாதி வேறுபாடுகளைக் கண்டிக்கும் அந் நூலை மொழி பெயர்த்தமைக்காக நூலாசிரியரைப் பாராட்டினர். திருவாளர்கள். டி. வி. விசுவநாத ஐயர், டி. எஸ். ராமலிங்கம் பிள்ளை ஆகியோர் நூலைப் பாராட்டிப் பேசினர்.

நூலாசிரியரான திரு. ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் தமக்களித்த பாராட்டுரைகளுக்கு நன்றி நவின்றார்.

இந்தியைப் பரப்ப 16 மொழி அகரமுதலி நூல்கள்

அரசியல் சட்டத்தில் கண்டபடி இந்தியைப் பரப்பும் பொருட்டு முதன் முதல் 16 மொழிகளைக் கொண்ட அகரமுதலி ஒன்று வெளியிட நடுவணரசு தீர்மானித்துள்ளது. இந்தி மொழித் துறையினர் பெரிய திட்டம் ஒன்றை ஏற்படுத்தி அதன்வழி இரண்டு ஆண்டுகளில் இந்தியை முதன் மொழியாக வைத்து அகரமுதலி நூல்கள் சிலவற்றைக் கொண்டு வருமாம்.

இந்தி மொழித் துறையினர் இந்தியுடன் இந்திய மொழிகளில் ஒன்றையோ இரண்டையோ கொண்ட அகரமுதலி நூல்களையும், அங்ஙனம் எடுத்துக் கொண்ட மொழிகளை முன் வைத்து அவற்றிற் கேற்ற இந்தி மொழிச் சொற்களை அமைத்துள்ள அகரமுதலி நூல்களையும் கொண்டு வருமாம். இதையொட்டிக் கையடக்க அகரமுதலி ஒன்றையும் கொண்டு வருவதற்கெனத் தனிக்குழு ஒன்று அமைக்கப் பெற்றுள்ளதாம்.

வெளிநாட்டு மொழிகளில் சிலவற்றை எடுத்து இந்தி செர்மன், இந்தி சப்பானியம், இந்தி மங்கோலியன், இந்தி புஸ்டர் ஆகிய அகரமுதலி நூல்களையும் கொண்டுவரத் திட்டமிடப் பெற்றுள்ளது. பிற நாடுகளுடன் பண்பாட்டுத் தொடர்பு கொள்ளுந் திட்டத்தின்கீழ் மேலே குறிப்பிட்டுள்ள அகரமுதலிகள் கொண்டுவரப்படுமாம். மேலும் இந்தி பிரஞ்சு, இந்தி செக் ஆகிய அகரமுதலிகளையும் கொண்டு வருவதற்குப் பிரான்சு, செக் ஆகிய நாடுகளுடன், இந்தி மொழிப் பரப்புக்குழு தொடர்பு கொள்ளுகிறது.

பேரவாக் கொண்ட இரண்டாண்டுத் திட்டத்தின்கீழ் 60 பாடங்களுக்கு ஆங்கிலம் இந்திக் கலைச் சொற்களைக் கொண்ட அகரமுதலி அச்சிடப் பெற்று முடியுந்தறுவாயில் இருக்கிறதாம். அதன்கண் அறிவியல், மக்கட்பண்புச் சார்பு, மொழியியல், வேளாண்மை அரசியல் துறைகள் ஆகியவை பற்றிய சொற்களெல்லாம் இடம் பெறுகின்றன வாம். மேலும் படைத்துறை, பாதுகாப்பு, போட்டி யாட்டங்கள் ஆகியவை பற்றிய சொற்களையும் சேர்ப்பதற்குரிய முயற்சியும் நடை பெறுகின்றதாம்.

இந்து 18-7-75

குறிப்பு :— நந் தமிழ்நாட்டில் தமிழ் மொழிக்கு இத்தகைய அகர முதலிகளைக் கொண்டு வருவதற்குத் தமிழரசு திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டுமென்பது எனது பெரு விருப்பாகும். தமிழறிஞர்கள் சிந்திப்பார்களாக.

வ. சு.

மதிப்புரை

ஆராய்ச்சி நெறி முறைகள்.

[டாக்டர் ச. வே. சுப்பிரமணியன். உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். சென்னை-20. விலை : ரூ. 5-00.]

'உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்' என்ற பெயருக்கு ஏற்ற வகையில் 'ஆராய்ச்சி' என்றால் என்ன என்பதையே 'ஆராய்ச்சி' செய்ய முற்பட்டிருப்பது வரவேற்கத் தக்கது. கடந்த பத்து ஆண்டுகளில் அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் எம். லிட், பி. எச் டி. போன்ற பட்டங்களுக்குப் பலர் ஆராய்ச்சி செய்கின்றனர். ஆராய்ச்சி செய்யும் நெறிமுறைகளை நன்கு அறிந்து கொண்டால்தான் ஆராய்ச்சி சிறக்க அமையும். ஆய்வாளர்களுக்கு உதவி செய்யும் வகையில் கலை, அறிவியல், பொறியியல் போன்ற பல துறைகளில் ஆய்வுப் பட்டம் பெற்றவர்களும் பல ஆய்வு மாணவர்களை நெறிப் படுத்துபவர்களுமான ஒன்பது பேராசிரியப் பெருமக்களைக் கொண்டு 'ஆராய்ச்சி நெறிமுறைகள்' குறித்து ஆய்வரங்கத்தை நடத்தி அவர்தம் ஆற்றல்களைப் புத்தக வடிவிலே வடித்துத் தந்து தமிழகம் முழுவதிலும் பல்வேறு துறைகளில் ஆய்வு செய்வோர்க்கு ஒருவழிகாட்டியாய் அமையும் வகையில் இந்நூலை முழுப் பொறுப்பேற்று வெளியிட்ட பதிப்பாசிரியர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் அவர்கள் பாராட்டுதற்குரியர்.

A Course in Modern Standard Tamil – Dr. P. Kothandaraman

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், அடையாறு. விலை : ரூ. 7-50.]

தமிழ் நாட்டிற்கு மேலை நாட்டினர் வரத் தொடங்கியதிலிருந்து அவர்கட்குத் தமிழ் மொழியைக் கற்பிக்கக் கடந்த நான்கு நூற்றாண்டுகளாகப் பெருமுயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வந்துள்ளன. சென்ற நூற்றாண்டுவரை சீகன் பால்கு, வீரமாமுனிவர், டாக்டர் போப், கிரவுல் சாத்திரியார், ஆர்டன் போன்ற மேனாட்டினரே தமிழ் மொழி பயிலுதற்கேற்ற வகையில் இலக்கண நூல்களையும் பாட நூல்களையும் எழுதி வந்தனர். இந்த நூற்றாண்டில் தமிழ் அறிஞர்களே பிற மொழியாளர்கட்கு ஏற்ற வகையில் பாட நூல்களைத் தொகுத்து வெளியிட்டு வருகின்றனர்.

இவ் வகையில் டாக்டர். கோதண்டராமன் அவர்கள் உருவாக்கியுள்ள இப்பாட நூல் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. சிலர் பேச்சு மொழியை மட்டுமே மையமாக வைத்துக் கொண்டு பாடநூல் எழுது கையில் பேச்சு மொழி, உரையாடல் மொழி, எழுத்து மொழி போன்ற எல்லா மொழிகளிலும் படிப்படியாக, பிறமொழியாளர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் இந்த நூலை இயற்றியிருப்பது பாராட்டுதற்குரியது. ஆசிரியர் மேனாட்டில் ஆசிரியப் பணியாற்றிய அனுபவம் இந்நூலை உருவாக்குவதற்குப் பேருதவியாயிருந்திருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2 140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.

பிறபதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

தமிழில் விடுகதைகள்	—ச. வே. சுப்பிரமணியம்	10	00
பிரதிபிம்பம்	—நா. பார்த்தசாரதி	5	00
நம்மொழி நானூறு	—மு. சாயபு மரைக்காயர்	3	00
ஆராய்ச்சி நெறிமுறைகள்	—ச. வே. சுப்பிரமணியன்	5	00
Tamil Research through Journals	—A. R. Manavalan M.A.	7	50
Modern Standard Tamil	—Dr. Kothandaraman	7	50
ஆழ்வார்கள் தமிழில் அக்காரக் கனிகள்	— தி. கி. நாராயணசாமி நாயுடு	7	50
அதைவிட ரகசியம்	—கண்ணதாசன்	3	50
Kapilarahaval	—A.V.Subramania Aiyar	7	50
பத்ரகாளி	—மகரிஷி	3	00
பனித்துளிகள்	—முருகு சுந்தரம்	6	00
கட்டில் வீணை	—கவிஞர் புதுமைவாணன்	6	00
பெரியபுராண ஆய்வுரை சம்பந்தர்	—மறை. திருநாவுக்கரசு	10	00
பெரியபுராண ஆய்வுரை அப்பர்	— ,,	10	00
நெஞ்சுக்கு நீதி	—கலைஞர் மு. கருணாநிதி	40	00
இலக்கியமும் வாழ்க்கையும்	—பேரா. வ. பெருமாள்	4	00
வேட்டி	—கி. ராஜநாராயணன்	6	00
நினைவின் நிழல்கள்	—நா. பார்த்தசாரதி	7	00
ராஜபீடம்	—கௌதம நீலாம்பரன்	6	00
ஆண்டவன் வந்தான்	—எம். வி. வெங்கட்ராம்	10	00
ஊர்க்காவலன்	—ராதாவீரண்ணன்	10	00
அன்பில் வாழும் இதயம்	— ,,	6	00
நாம் வந்த வழி	—பத்மா ராஜகோபால்	6	00
தமிழால் முடியும்	—சி. சுப்பிரமணியம்	6	00
திக்குவாயை நீக்கும் செய்முறைப் பயிற்சிகள்	—கே. ராஜகுரு	8	50
அறவிளக்கு	—கோ. சிவகுருநாதன் எம்.ஏ.	4	50
அறுமுகனின் அருள்மிகு தலங்கள் அறுபத்தாறு	—புலவர் பி. நடராசன்	4	00

பதிவு எண் : M. 4899

தமிழ்நாடு நல்வாழ்வுத்துறை அமைச்சர்
மாண்புமிகு
பேராசிரியர் க. அன்பழகன், எம். ஏ.
அவர்கள் எழுதிய

"தமிழ்க்கடல் அலை ஓசை"

(விலை ரூ. 7-00)

நூல் பற்றிக் கலைஞர் கருத்துரை :

"...குமரிக் காட்சியில் தொடங்கித் தமிழ்த் தென்றலில் சுகம் வழங்கி, அன்னையைப் போற்றி முடியும் இந்நூல் அந்த அன்னை பெற்றுள்ள அரும் பெருஞ் செல்வர்களைப் பற்றிய செவி யினிக்கும் சிறப்புக்களைத் தொடர்ந்து சொல்லும் என்ற நம்பிக்கையும், சொல்லவேண்டுமென்ற அவாவும் மிகவுண்டு எனக்கு! இந்த நூலில் இடம்பெறும் செந்தமிழ்ச் செல்வர்களேயன்றி வேறு பலரும் உளரே, வேர்ப்பலாத் தமிழுக்குச் சுவை சேர்த்தவர்களாக! அவர்தம் செழுமிய வாலாறுகளையும் பேராசிரியர் படைத்திட வேண்டும் என்ற உணர்வினை, இந்த நூல் நமக்குத் தருகின்றது என்பதில் ஐயமுண்டோ?

சுற்றிச் சுழன்று வந்த பகைமை அணிகளை யெல்லாம் புறமுதுகிடச் செய்து வெற்றிக்கொடி நாட்டி நிற்கும் தமிழ் மொழியின் வலிவு எத்தகையது என்பதையும் வளம் எத்துணை சிறப்புமிக்கது என்பதையும் இந்நூல் மலரின் இதழ்கள் ஒவ்வொன்றும் மணம் பரப்பிக் காட்டும் விந்தைதான் என்னே!"

முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி

அப்பர் அச்சகம், சென்னை - 1.